# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 | இதழ் 44 | ஜூலை 11, 1964 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


# யூ.என்.பி.யின் "புரட்சி" ஒப்பாரி!

**1965-ம் ஆண்டு இறுதியில், சாதாரண காலவரையறை காலத்தில் பாராளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறவில்லையாயின், புரட்சி நடத்தி ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்று சென்ற வார முடிவில் யூ. என். பி. தீர்மானித்திருப்பதற்கு பல முக்கிய காரணங்கள் உண்டு.**

# ஜனநாயக மாய்மால வேஷம் கிழிந்தது

## பிற்போக்காளர் சதி தகர்க்க பாட்டாளி வர்க்க படை திரளட்டும்

இத் தீர்மானத்தின் முக்கிய காரணமாகவிருப்பது என்ன? இலங்கை மக்கள் முற்போக்குப் பாதையில் முன்னேறுவதற்கு, பிற்போக்கு வாதிகளினால் விடுக்கப்பட்ட சவாலாக இது அமைந்துள்ளது. ஏகாதிபத்தியமும், அதற்கு வால்பிடிக்கும்உள்நாட்டு முதலாளித்துவ வர்க்கமும், இந்நாட்டின் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றுவதற்கு எடுக்கும் முயற்சிகள் இதிலிருந்து தென்படுகிறது. அதோடு, இந்தத் திட்டத்தை அமுல்படுத்த அவர்கள் கையாள எண்ணியுள்ள வேலைத் திட்டத்தின் சுயரூபம் இதிலிருந்து துலாம்பரமாகிறது.

ஆட்சியை மீண்டும் கைப்பற்றுவதற்கு பிற்போக்கு வாதிகள் நாடெங்கும் உருவாக்கி வரும் பயங்கரத் திட்டங்கள் இன்று நாடறிந்த விஷயமாகியுள்ளது. அவர்கள் பகிரங்கமாகப் பொதுத் தேர்தலொன்றுக்கு தயாராகவிருக்கும்அதே வேளையில், நாட்டில் கிளர்ச்சிகளையும்,குழப்பங்களையும்உருவாக்கவும்இரகசியமாகத் திட்டம் உருவாக்கித் தயாராகவுள்ளார்கள். யூ. என். பி-ஸ்ரீலங்கா-இடதுசாரிகள் ஆகிய மூன்று பகுதியினரும் தனித்தனியே தேர்தலில் கலந்துகொண்டால், தமக்கு சாதகமாகத் தேர்தல் முடிவு அமையும் என்பதை யூ.என்.பி. கட்சியினர் உணர்ந்திருந்தனர். ஆனால், அண்மையில் உருவான அரசியல் மாற்றங்களினால், அவர்களின் நம்பிக்கையும், அவர்கள் எதிர்பார்த்திருந்தவைகளும் ஓரளவு சின்னாபின்னமடைந்துள்ளன. இதை யூ.என்.பி. காரர்கள் இன்று நன்குபுரிந்துள்ளார்கள். பாராளுமன்றத் தேர்தல் நடைபெறாவிட்டால் புரட்சி செய்வோம் என்று கூறியது மூலம், தேர்தல் நடைபெற்றால், அக்காலத்திலும் தான் செய்யவிருப்பதை யூ.என்.பி. தெளிவுபடுத்தியுள்ளது. எது எப்படி இருப்பினும், யூ. என். பி. யினாலும் ஏகாதிபத்தியவாதிகளினாலும் எதிர்காலத்தில் இந்நாட்டிற்கும், இந்நாட்டு மக்களுக்கும் மிகப்பெரும் ஆபத்து உண்டு என்பதை இவை எடுத்துக் காட்டுகின்றன.

யூ.என்.பி. தீர்மானத்திலிருந்து வெளியாகும் மற்றுமொரு முக்கிய காரணம் என்னவெனில், இது நாள் வரை யூ.என்.பி. மாய்மாலம் காட்டிய ஜனநாயக வேஷம் இப்பொழுது கலைந்துள்ளது. புரட்சி என்று அவர்கள் கூறி இருப்பது, காடைத்தனத்தையும், கயவாலித்தனத்தையும் நாடெங்கும் கட்டவிழ்த்துவிடுவதுதான். பகிரங்கமாக நடத்தப்படும் காடைத்தனக் குழப்பங்களின் மூலமும், இரகசியமாக நடத்தப்படும் சதிகள் மூலமும்ஆட்சியைக்கைப்பற்றுவதே யூ.என்.பி. யின் வஞ்சக எண்ணமாகும். உண்மையில் அவர்கள் செய்ய எண்ணியுள்ளது, காடைத்தனத்தின் மூலம் எதிர்ப்புரட்சி செய்வதாகும்.

தாம் பாராளுமன்ற முறையில் நம்பிக்கை வைத்திருப்பதாகவும், பாராமன்ற சட்ட விதிகளுக்கு உட்பட்டே நடந்து வருவதாகவும், இதிலிருந்து ஒருபோதும் தாம் விலகிச்செல்வதில்லை என்றும் எண்ணற்ற தடவைகளில் யு. என். பி. கூறி வந்துள்ளது. முதலாளித்துவ பாராளுமன்ற முறையின் கீழ் நடைபெறும் சகல வற்றிற்கும், பாராளுமன்ற சட்ட விதிகள், நடைமுறைகள், ஆசாரங்கள் ஆதியன வற்றிற்கும், பிரித்தானிய பாராளுமன்ற அமைப்பில் அடங்கியுள்ளவைகளே இங்கும் பின்பற்றப்படுகின்றன என்பதை யு.என்.பி. அறியும். இவைகளை நன்கு அறிந்துகொண்டு, குழப்பங்களையும், காடைத்தனங்களின் மூலம் கலவரத்தையும் உண்டாக்கத் தீர்மானித்தது மூலம், பாராளுமன்ற முறையில் தாம் நம்பிக்கை வைத்துள்ளதாகக் கூறிவந்த வெளிவேஷத்தை யு. என். பி தூர எறிந்துவிட்டுள்ளது. பாராளுமன்ற முறை, அரச அதிகாரம் ஆதியன சம்பந்தப்பட்ட மட்டில் முதலாளித்துவ வர்க்கத்தின் நோக்கம் என்ன என்பது பற்றியும் மார்க்சிஸ-லெனினிஸ சித்தாந்தத்தின் துணைகொண்டு இதுகால வரை நாம் வலியுறுத்திக்கூறி வந்திருப்பது இன்று எல்லோரும் அறிந்துகொள்ளும் விதத்தில் பகிரங்கமடைந்துள்ளது. அதோடு, மார்க்சிஸ-லெனினிஸத்தின் தீர்க்கதரிசனங்களின் சத்திய வாக்கையும் ருஜுப்பித்துள்ளன. சுரண்டிக் கொழுக்கும் வஞ்சகர் கூட்டத்தினர், தமக்கு சாதகமும், லாபமும் இருக்கும் வரைதான் சமாதான பாராளுமன்ற முறையையும், ஜனநாயக முறையையும் பின்பற்றுவார்கள் என்பதும், மற்ற வேளைகளில் அவர்கள் கலவரத்தையும், காடைத்தனத்தையும், அடக்கு முறைகளையும், ஆராஜக சதிகளையும்தான் உருவாக்குவார்கள் என்பதை நாம் தெளிவாகவும், தீர்க்கமாகவும் கூறி வந்துள்ளோம். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அதிகார வர்க்கம்-குறிப்பிட்ட, நியாயமான காலத்தில் பாராளுமன்ற பொதுத் தேர்தலை நடத்தாவிட்டாலோ, அதற்கு எதிராக யு. என். பி. கலவரத்தை உண்டு பண்ணினாலோ, இவ்விரண்டு நடைமுறைகளும் இதுநாள்வரை நாம் பாராளுமன்ற முறைபற்றி கூறிவந்தவைகளிலுள்ள பூரண உண்மையை தெளிவுற மெய்ப்பிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நிலைமை எப்படி இருப்பினும், யு. என். பி.க்கு நாம் ஒன்று கூற விரும்புகிறோம். யு.என்.பி.யின் "புரட்சி"க்கு எதிராக முன்னின்று போராடுவது இந்த நாட்டில் ஸ்தாபன ரீதியாகத் திரண்டுள்ள தொழிலாள வர்க்கமே என்பதை அழுத்தந்திருத்தமாக யு. என். பி.க்கு கூறி வைக்கிறோம். மக்களின் முன்னேற்றத்தைத் தடுக்கவும், முடைக்கல் போடவும் யு. என். பி. காடைத்தனத்திலும், கலவரத்தை உண்டு பண்ணுவதிலும் இறங்கினால், நிச்சயமாக மக்கள் சக்தி அதற்கு எதிராகப்போர்க்கோளம் பூணத்தயங்காது என்பதை யு. என். பி.க்குஅறுதியிட்டுக் கூறுகிறோம்.

ஏகாதிபத்தியவாதிகளையும், யு. என். பி.யையும், பிற்போக்குச் சக்திகளையும் பூரணமாக இந்நாட்டிலிருந்து தொலைத்துக் கட்டும் கைங்கரியம் தேசிய முதலாளித்துவ சுதந்திரக் கட்சியினால் ஈடேறும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இதற்கு முன் நாம் எடுத்துக் காட்டி இருப்பது போல், ஏகாதிபத்தியவாதிகளையும், யு. என். பி.யையும் நிர்மூலமாக்கவுள்ள மார்க்கம், இத்தீய சக்திகள் விட்டுச் சென்றுள்ள பொருளாதார அமைப்பைத் தகர்த்தெறிவது மூலமும், வர்க்க அமைப்பை மாற்றி அமைப்பது மூலமுமே இயலும். இந்த அவசிய, அத்தியாவசிய, அடிப்படைக் கடமைகளை செய்து முடிக்க சுதந்திரக் கட்சி அரசாங்கம் தவறியதன் காரணத்தாலும், போதிய நடவடிக்கைகள் எடுக்காததாலுமே இன்று புரட்சி நடத்த யு. என். பி. அச்சுறுத்த முன்வந்துள்ளது. அதோடு, இந்த அளவுக்கு தனது சக்தியைக் காட்ட யு.என்.பி.க்கு இன்று வாய்ப்பளித்துள்ளதும் சுதந்திரக் கட்சியின் பலகீனமான குறைபாடுகளேயாகும்.

யு. என். பி.யின் இந்த அச்சுறுத்தலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவோ, யு. என். பி.யின் சவாலை ஏற்று அதற்கு எதிராக உடனடியாகத் திட்டமிடவோ இந்த அரசாங்கத்தால் முடியாது என்பது எமது அபிப்பிராயமாகும். யு. என். பி.யை முற்றாக முறியடிக்கவுள்ள ஒரே பகுதியினர் ஸ்தாபன ரீதியாகத் திரண்டு இயங்கிவரும் தொழிலாளி வர்க்கத்தினர்தான். இவர்களின் தீவிர நடவடிக்கைகளினால் மட்டுமே யு. என். பி.யை தொலைத்துக் கட்ட முடியும். இந்த தேசியக் கடமையை தொழிலாளர் வர்க்கம்நிச்சயம் கடைத்தேற்றும்என்பதை இங்கு வலியுறுத்திப் பிரகடனம் செய்கிறோம்.

---

இந்தோசீன—ஜெனீவா ஒப்பந்தத்தின் 10-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடு முகமாக

**பொதுக்கூட்டம்**

கொழும்பு புதிய டவுன் ஹாலில்

**20-7-1964**

திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

இலங்கை-வியட்நாம் நட்புறவு சங்கம்.

---

# வெடி மருந்துகள் களவு

## ஜே. ஆரின் 'புரட்சி'க் கூச்சலுடன் சம்பந்தம் உண்டா?

ஒரு இராணுவ அதிகாரிக்கு எதிராகச் செய்யப்பட்ட விசாரணையின்போது, விசாரிக்கப்பட்ட சாட்சியில் திடுக்கிடக்கூடிய பல உண்மைகள் வெளிவந்ததைக் கடந்த வாரப் பத்திரிகைகளில் காண முடிந்தது.

இராணுவத் தலைமைக் காரியாலயத்தின் கால்பேஸ் திடலிலுள்ள ஆயுதங் கிடங்கிலிருந்து 200 தடவை சுடுவதற்கான தோட்டாக்கள், பெருந்தொகையான வெடி மருந்துகள் மற்றும் ஆயுதங்கள் காணாமற்போன செய்திகள் சம்பந்தமாக விசாரணையில் சாட்சியம் வாயிலாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இச் செய்திகளுக்குப் பிறகு கூட்டரசாங்கம் ஏற்பட்டதன் பின் தேர்தல் நடைபெறுதென்ற பீதியை நாட்டில் யூ. என். பி. ஏற்படுத்திவிட்டு, மக்களின் கவனத்தை வேறு திசைக்குத் திருப்ப முயன்று வருகிறது.

''1965-ம் வருடம் ஆகஸ்டு மாதத்திற்குப் பிறகு சட்ட விரோதமான முறையில் அரசாங்கம் நீடிக்கப்படுமானால் அரசாங்கத்திற்குஎதிராகவும், அதனை கவிழ்க்கவும் புரட்சிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதென்று ஐக்கிய தேசியக் கட்சியின் காரியக்கமிட்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.'' என்று பத்திரிகை செய்தி கூறுகின்றது. இராணுவத்திலுள்ள பிற்போக்கு சக்திகளும், நாட்டிலும் மற்றுமுள்ள ஏகாதிபத்திய நாசகார ஏஜண்டுகளும், சதிகாரர்களும் வேறு ஏதோ சூழ்ச்சிகர நடவடிக்கைகளுக்குத் தயார் ஆகிறார்கள் என்றே ஜே. ஆரின் பேச்சிலிருந்து வெளிப்படுகிறது.

நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடிகளை முழுமையாக தீர்த்துக்கட்டாது, முதலாளித்துவ அமைப்பின் மூலம் சில சீர்திருத்த செயல்களை செய்து தோல்வியடைவதன் மூலம் மக்களிடையில் ஏற்படும் அதிருப்தியையும் விரக்தியையும் பயன்படுத்திக்கொண்டு, தேர்தல் ருசியையும் வெளிக்காட்டி விரக்தியடைந்த பெரும்பான்மையான மக்களுடைய தேவையையும் யூ. என். பி யின், ஏகாதிபத்திய பிற்போக்காளர்களின் தேவையையும் அபிலாஷைகளையும் ஒன்றாக இணைத்து குழறுபடியாக்கி தங்களது திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கு இப்பொழுதிருந்தே திட்டமிடப்படுகிறது என்பதேஇந்த இராணுவ ஆயுதங்கள் களவுகள் சம்பந்தமான செய்திகள்மூலமும், ஜே. ஆரின் பேச்சுக்களிலிருந்தும் வெளிப்படுகிறது.

---

## யாழ்ப்பாணத்தில் வாலிபர் சங்கத் தலைவர்

இலங்கைக் கம்யூனிஸ்ட் மற்றும் வாலிபர் சங்கங்களின் யாழ்-பிரதேச சபை ஆகஸ்ட் மாதத்தில் அதன் மாநாட்டை நடத்த விருப்பதையொட்டி பிரதேசத்தின் தயாரிப்புக் கூட்டங்களிலும், பிரதேச கமிட்டிக் கூட்டத்திலும் கலந்துகொள்வதற்காக இலங்கைக் கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்கங்களின் சம்மேளனப் பொதுச் காரியதரிசி தோழர் டபிள்யூ. ஏ. தர்மதாஸா வியாழக்கிழமை யாழ்ப்பாணம் புறப்பட்டார்.

# சமசமாஜத் தலைவர்களின் 8 மணி நேர வேலைக் கூப்பாடு!

கூட்டரசாங்கத்தினுள் காலெடுத்து வைத்த நாள் முதல், எட்டு மணி நேர வேலை செய்யும்படி தொழிலாளர்களை வற்புறுத்தி சமசமாஜத் தலைவர்கள் கூச்சல் போட்டு வருகிறார்கள். முதலாளித்துவ சமுதாயத்தின் கீழ், மார்க்சிஸ்டுகள் என்று மார்தட்டும் சமசமாஜத் தலைவர்கள் போடும் இக்கூப்பாடு சரியா? மார்க்சிஸ சித்தாந்தத்திற்குப் பொருத்தமானதா? இவைகளுக்கு ஆணித்தரமான பதில் தருகிறது இக்கட்டுரை.

**நா. சண்முகதாஸன்**

## மார்க்சிஸம் தரும் பாடம்

தொழிலாளர்களுக்கு சமசமாஜ மந்திரிகள் விடுத்த முதல் வேண்டுகோள், எட்டு மணி நேர வேலையைப் பூரணமாகச் செய்யவேண்டும் என்பதே. இது, முதலாளித்துவ வர்க்கத்தின் நீண்ட காலக் கனவாகும் - தொழிலாளர்களிடமிருந்து மிகக் கூடுதலான வேலை வாங்குவது, அதற்கு மிகக் குறைந்த கூலி கொடுப்பது-இதற்காக, அவர்கள் தொழிலாளர்கள் மலஜலக் கூடத்தில் கழிக்கும் நிமிடங்களைக் கூட கட்டுப்படுத்தி பராமரித்து வருகிறார்கள். இதனால், தொழிலாளியும், முதலாளித்துவ சமுதாயத்தின் கீழ் மிகக் குறைந்த அளவு வேலை செய்து, அதிக சம்பளம் பெற முனைகிறான்.

முதலாளிகளையும், தொழிலாளிகளையும் பொறுத்தமட்டில், இது இயற்கையான, உள்ளார்ந்து எழுகின்ற பிரதிபலிப்பாகும். முதலாளித்துவ சமுதாயத்தின் வேலைகளையும், அதன் வளர்ச்சியை ஆட்சி புரியும் சட்ட விதிகளையும் நாம் அலசினால், இதை அறிய முடியும். ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இந்த சட்ட விதிகளைக் கண்டு பிடித்து, விஞ்ஞான பூர்வமாகக் கார்ல் மார்க்ஸ் விளக்கினார்.

ஒரு தொழிலாளி எட்டு மணி நேரம் ஒரு முதலாளிக்கு வேலை செய்ய ஒத்துக் கொள்வது மூலம், உண்மையில், அந்த எட்டு மணி நேரத்திற்கு தனது உழைப்பு சக்தியை முதலாளிக்கு விற்கிறான். முதலாளியிடமிருந்து அவன் பெறும் சம்பளம், எட்டு மணி நேரம் தான் விற்கும் உழைப்புச் சக்திக்கான விலையாகும். உற்பத்தி சக்திக்கான இந்த விலை அல்லது நாள் ஊதியம், முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையே நடைபெற்ற சம்பளம் சம்பந்தமான போராட்டத்திலும், சம்பளத்தைக் குறைத்திட முதலாளியின் தொடர்ச்சியான சூழ்ச்சியின் தொடர்பிலும் உருவானதாகும். ஆனால், இந்த ஊதியத்திற்கும், எட்டு மணி நேரம் தான் பிரயோகித்த உழைப்புச் சக்தியின் மூலம் சிருஷ்டித்தவற்றின் மதிப்பீட்டுக்கும் எந்த வகையிலும் சம்பந்தமில்லை. உழைப்புச் சக்தியின் இந்த சிருஷ்டி அல்லது ஆக்கம், பறிக்கப்பட்ட தேயிலையாக இருக்கலாம், பழுது பார்க்கப்பட்ட காராக இருக்கலாம், செய்யப்பட்ட நாற்காலிகளாக இருக்கலாம். இவைகளில் புகுத்தப்பட்ட உழைப்புச் சக்தியை விட குறைந்த அளவே ஒரு தொழிலாளி சம்பளமாகப் பெறுகிறான்.

தொழிலாளி இதை நன்கு உணர்ந்திருக்கிறான். எட்டு மணி நேர வேலையின் போது தனது உழைப்புச் சக்தியால் தான் சிருஷ்டித்தவைகளுக்கான பூரண மதிப்பீட்டுக்கு ஒத்த அளவில் தனக்கு ஊதியம் கிடைப்பதில்லை என்பதை தொழிலாளி அறிவான். தனது உழைப்புச் சக்திக்கு ஏற்ற சமமான ஊதியம் சோஷலிஸத்தின் கீழ், அவனும் அவனது சகாக்களான தொழிலாளர்களும் உற்பத்திச் சாதனங்களின் உரிமையாளர்களாக ஆனதன் பின்னரே கிடைக்கும் என்பதை தொழிலாளி அறிவான். ஆனால், முதலாளித்துவத்தின் கீழ் (இலங்கையில் இருப்பது போன்று), உற்பத்திச் சாதனங்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் கீழ் இருக்கும் வரை, தொழிலாளியினது உழைப்பின் பெரும் பகுதி, இந்த உற்பத்தியின் மதிப்பீட்டிற்கு எவ்வகையிலும் துணைதராத சோம்பேறிக் கூட்டமான முதலாளித்துவ வர்க்கத்தின் பைகளுக்குள் மாயமாய் மறைந்து விடுகிறது. எனவே, அயுகமாக வேலை செய்து முதலாளித்துவ உற்பத்தி மதிப்பீட்டைக் கூட்டி முதலாளித்துவத்தின் பங்கை அதிகரிக்கக் காரணமே இல்லை என்பதை தொழிலாளி உணர்கிறான். எட்டு மணிநேர காலத்தில் அதிகம் அதிகமாகத் தாம் வேலை செய்வது மூலம், உற்பத்தி மதிப்பீட்டில் தன் பங்கு அதிகரிக்காது என்பதையும் நன்கு அறிவான். அதாவது, தனது அதிக உழைப்பால் முதலாளியின் லாபம் கூடுமே தவிர, தனக்கு அதிலிருந்து பலன் கிட்டாது என்பதை அவன் தெரிந்துள்ளான். மார்க்சிஸப் பொருளாதாரத்துடன் பழக்கப்பட்ட எவருக்கும் இது சர்வ சாதாரணமாகத் தெரியக் கூடிய விஷயமாகும்.

ஏங்கல்ஸ் வாழ்ந்த காலத்தில் இங்கிலாந்திலிருந்த சிலர், ''நியாயமான ஒரு நாள் வேலைக்கு நியாயமான சம்பளம்'' என்ற கோஷத்தைக் கிளப்பினர். ஏங்கல்ஸ் உடனடியாக இதற்கு மறுப்புத் தெரிவித்தார். ''நியாயமான சம்பளம் என்றொன்றில்லை என்று சுட்டிக் காட்டியதுடன், எல்லா சம்பள முறைகளும் உழைப்பைச் சுரண்டுவதையே பிரதிநிதித்துவப் படுத்துகின்றன என்பதை விளக்கினார். தொழிலாளி வர்க்கத்தின் ஒரே கோஷம் சம்பள முறையையே ஒழித்துக் கட்டுவது தான் என்றார் ஏங்கல்ஸ்.

முன்னொரு காலத்தில் சிறந்த மார்க்சிஸ வாதிகளாகத் தம்மை முன்னிருத்தியவர்கள், சோஷலிஸம் தந்த மகோன்னத புருஷர்களின் உபதேசங்களையே இன்று மறந்துவிட்டனர். ஒரு முதலாளித்துவ அரசுக்குள் புகுந்த மறுகணமே, முதலாளித்துவ யந்திரத்தைப் பாதுகாக்கும் பாத்திரத்தை வகிக்க ஆரம்பித்து விட்டார்கள். அந்தோ! இன்று அவர்களுக்கு வேறு மார்க்கமில்லை. எனவேதான் முதலாளித்துவ வர்க்கம் அவர்களை ஆட்சிக்குள் சேர்த்துள்ளது. சுதந்திரக் கட்சி தலைவர்கள் அதிகமாக வேலைசெய்யும் படி தொழிலாளர்களைக் கோரினால், அதற்குநன்மதிப்பு இருக்காது. தொழிலாளிகளும் அதை ஏற்க மறுப்பார்கள். ஆனால், சமசமாஜக் கட்சியைப் போன்று தொழிலாளத் தலைவர்கள் தொழிலாளர்களை இதே துறையில் வேண்டும் போது, ஆரம்பத்தில் தொழிலாளர்களிடையே தடுமாற்றம் ஏற்படுவது இயல்பே. ஆனால், தொழிலாளர்கள் முட்டாள்களல்ல. தமது உழைப்பின் பூரண மதிப்பீட்டை முதலாளித்துவ முறை ஏமாற்றிப் பறித்து வருவதை அவர்கள் அறிவார்கள். இந்த ஏமாற்று வேலைக்கு உதவி தர அவர்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள்.

எட்டு மணிநேர வேலை செய்யும்படி தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் அளவுக்கு சமசமாஜத் தலைவர்கள் முன் வந்திருக்கிறார்களென்னின், அவர்களின் சீர்கெட்ட நிலையை என்னென்பது! இவர்களின் சீர்கேடு இத்தோடு முற்றுப்பெறாது. முதலாளித்துவத்துடன் கைகோர்த்துச் செல்ல உச்சக் கட்டத்திலிருந்து இறங்கிய பின் பாதாளத்திற்கு வரும்வரை வழுகிக்கொண்டு இவர்கள் வருவார்களே தவிர, எங்கும் நிற்கப் போவதில்லை.

# பெருகி வளரும் தேசிய விடுதலைப் போராட்டங்கள்

## ஏகாதிபத்தியம் அழிந்துபடுவது உறுதி

### தோழர் ஐடிட் உரை

எல்லாவிதமான சந்தர்ப்பவாதத்தையும் எதிர்த்த போராட்டம், அடக்கப்பட்ட தேசங்களின் புரட்சிகள் வெற்றி பெறுவதற்கு அவசியமாகும். அடக்கப்பட்ட தேசங்களின் புரட்சிகள், தேசிய விடுதலைப் புரட்சிகள் ஆகியவை நேரடியாக ஏகாதிபத்தியத்துக்கு எதிரானவை. ஏகாதிபத்தியத்தை அழகுபடுத்த முனையும் சோஷல் ஜனநாயகம், திரிபுவாதம் முதலிய பல வகைச் சந்தர்ப்பவாதங்களும் இப் புரட்சிகளுக்கு ஆபத்துத் தருபவை.

''ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டம் சந்தர்ப்பவாதத்தை எதிர்த்த போராட்டத்துடன் பிரிக்க முடியாதபடி இணைக்கப்படாவிட்டால், அது வெறும் போலி ஏமாற்றாகும்'' என லெனின் குறிப்பிட்டுள்ளார். மேதை லெனினின் இக்கூற்றின் உண்மையை இந்தோனேஷிய மக்களின் புரட்சிகர அனுபவங்களைப் பற்றிய எமது கணிப்பும் நிரூபிக்கின்றது.

முன்னர் சோஷலிஸ, லேபர் மற்றும் கட்சிகளில் பதுங்கித் திரிந்த போலி மார்க்சிஸ்டுகள் ஒவ்வொருவராக இன்று இந்தோனேஷிய சரித்திர அரங்கிலிருந்து ஒதுங்கிச் சென்றுவிட்டனர். நவீனதிரிபுவாதிகளுக்கு ஆதரிப்பார் எவரையும் பிடிக்க முடியவில்லை. இயற்கையாகவே எல்லா விதமான சந்தர்ப்பவாதத்தையும் எதிர்த்த போராட்டத்தைத் தளர்த்த முடியாது. புதிய போலி மார்க்சிஸ்டுகள் புதிய உருவங்களில் தோன்றுவது நிச்சயம். லெனின் கூறியவாறு, ''மார்க்சிஸத்தின் தத்துவார்த்த வெற்றி அதன் எதிரிகள் தாமும் மார்க்சிஸ்டுகள் என்று பொய்வேடம் போட நிர்ப்பந்திப்பது சரித்திரத்தின் நியதியாகும்.''

தற்பொழுது; உலக ரீதியில் அமைந்த நவீன திரிபுவாதத்தின் பயங்கர அபாயம் தேசிய விடுதலைப் போராட்டத்தை மிகவும் பாரதூரமாகப் பாதிக்கக் கூடிய அபாயமாகும். ஏகாதிபத்தியவாதிகளின் அணு ஆயுத பலத்துக்கும். மிரட்டலுக்கும் கொடுக்கப்படும் விசேஷ முக்கியத்துவம் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நலன்களை 'உலக சமாதானத்திற்காக' ஏகாதிபத்தியத்வாதிகளுடன் சமரசம் செய்துகொள்ள எடுக்கும் முயற்சிகளுக்கு அடிபணியச் செய்யும் நோக்கம் கொண்டதாகும். ஆனால் லெனின் வலியுறுத்தினார், ''ஏகாதிபத்திய அரசுகளை எதிர்த்த தேசியப் போராட்டங்கள் நடைபெற முடியும் என்பது மட்டுமல்ல, தவிர்க்க முடியாதவை. அவை முற்போக்கானவை, புரட்சிகரமானவை. ...! அத்தகைய யுத்தம் வெடிப்பதைக் கண்டு வருத்தப்படுவதோ, அணு ஆயுத யுத்த ஆபத்துடன் திகழும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடும் மக்களைப் பயமுறுத்துவதோ அல்ல புரட்சிவாதிகளின் கடமை. மாறாக, சகல ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்று திரட்டி, இப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ள மக்கள் வெற்றியீட்டும் வண்ணம் இப் புரட்சிகர யுத்தங்களுக்கு உதவியளிப்பதே புரட்சிவாதிகளின் கடமை. லெனினும், ருஷியப் பாட்டாளி வர்க்கமும் உலக ஏகாதிபத்தியத்தை எதிர்த்த போராட்டத்தின் தலைசிறந்த உதாரணங்கள். அக்டோபர் புரட்சியின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவின் போது அளித்த ஒரு பேச்சில் லெனின் கூறினார், ''முன்னர் உலக ஏகாதிபத்தியம் அதி பிரமாண்டமான, தோற்கடிக்க முடியாத சக்தியாகவும், அதற்கெதிரான பின் தங்கிய ஒரு நாட்டின் தொழிலாளர்கள் கிளர்ந்தெழுவது மடைத்தனமானதாகவும் தோன்றியது. என்றாலும், இன்று எமது கடந்த இரு வருடங்களையும் பார்க்கும்பொழுது எமது எதிரிகள்கூட நாம் சரி என்பதை மேலும் மேலும் ஒப்புக்கொள்கின்றனர். அதி பிரமாண்டமாகத் தோன்றிய ஏகாதிபத்தியம் வெறும் மண் பாதங்கள் கொண்டதாக உலகம் முழுவதற்கும் நிரூபிக்கப்பட்டுள்ளது. கடந்து சென்ற இரு வருடங்களும் எமது போராட்டங்களும் ருஷ்யரின் வெற்றியை மட்டுமல்ல சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியையும் கூடிய தெளிவுடன் காட்டுகின்றது.''

லெனினதும் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தினதும் துணிவைப் பின்பற்றி பல மக்கள் வெற்றி கண்டுள்ளனர். பலம் வாய்ந்த சோஷலிஸ முகாம் இன்றுள்ளது. புதிய சுதந்திர நாடுகள் தோன்றியுள்ளன. அவை ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தை தொடர்கின்றன. இந்தோனேஷியாவின் சுதந்திரத்தைக் காப்பாற்ற ஆயுதப் போராட்டம் நடந்திராவிட்டால் இந்தோனேஷியக் குடியரசு கூடத் தோன்றியிருக்க முடியாது. 'சுதந்திரத்தை ஆயுதங்களுடன் பாதுகாப்பது' என்ற கொள்கை இன்றும் சரியானது; இந்தோனேஷிய மக்களுக்குப் பொருந்துவது.

இன்று பல தேசிய விடுதலைப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. ஏகாதிபத்தியம், குறிப்பாக அமெரிக்க ஏகாதி

—8-ம் பக்கம் பார்க்க

மார்க்சிஸ-லெனினிஸ நூல்களுக்கு
முற்போக்கு இலக்கியங்களுக்கு
அரசியல் பிரசுரங்களுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்
**யாழ் புத்தக நிலையம்**
431, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# ஒரு வார்த்தை

## சமஷ்டிக்கட்சியும்-பணமும்!

கிளிநொச்சி சமஷ்டிக் கட்சி பாராளுமன்ற அங்கத்தவர் திருவாளர் சிவசுந்தரம், கடந்த 4-ந் தேதி 'டெய்லி மிரர்' என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு எழுதிய ஒரு கடிதத்தில், சில திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளார். இதே தகவல்களை இதற்கு முன்னரே நாங்கள் வெளியிட்டிருந்த போதிலும், சமஷ்டிக் கட்சிக் கோட்டையிலிருந்து, அதிலும், சமஷ்டிக் கட்சியின் கூட்டுப் பொருளாளரிடமிருந்து இது வெளிவந்திருப்பது இதற்கு விசேஷ தன்மை அளிக்கிறது.

'போராட்ட நிதி' 'சத்தியாக்கிரக நிதி' 'தமிழர் உரிமை நிதி' என்று பல நிதிகளை சமஷ்டிக் கட்சி கடந்த காலங்களில் திரட்டி வந்திருப்பது யாவரும் அறிந்ததே. தமிழ் மக்களின் உணர்வைத் தட்டி எழுப்பி, மொழி உரிமை என்ற பொம்மலாட்டம் காட்டி சமஷ்டிக் கட்சியினர் காசு திரட்டியபோது, நண்பர் சிவசுந்தரம் இன்று கிளப்பியுள்ள கேள்விகளை அன்று நாம் கிளப்பினோம். எமக்கு அன்று கிடைத்த பதில், '' 'ஈழத்து காந்தி'யும், அவரது 'தளபதி'களும் தமிழ் மக்களுக்காகவும், தமிழ் மொழிக்காகவும் உயிர் விடக்கூடத் தயங்கமாட்டார்கள். அத்தகையோர் கேவலம் இப் பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்படுவார்களா?'' என்பதுதான். சமஷ்டி ஊதுகுழல் 'சுதந்திரன்' இதற்கு பக்கப்பாட்டு பாடியது.

இன்று எல்லாம் 'டப்'பென்று வெடித்து, நடுத் தெருவில் நாற்றத்தைக் கிளப்பிவிட்டுள்ளது. 'இந் நாட்டு காந்தி'யும், அன்னாரின் பொன்னான தோழர்களும் மண்ணாசைக்கு அடிபணிந்து விட்டார்கள்; பொன்னாசைகளும் அவர்களை விட்டபாடில்லை. தமிழ் மக்களும். 'மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த தமிழும்,' அவர்களின் கால் தூசு. பணம்......பணம்...... பணம்...... அதற்குமுன் தமிழாவது, மண்ணாங்கட்டியாவது, எல்லாம் பிணம்...... பிணம்...... பிணம்...!

இன்னொரு வார்த்தை........

நண்பர் சிவசுந்தரம் தனது கடிதத்தில் மற்றுமொரு வேடிக்கையான சமாச்சாரத்தையும் வெளியிட்டுள்ளார். அதாவது, ஸ்ரீ மாவோ ஆட்சியின் 5-வது சிம்மாசனப் பிரசங்கத்தின் பின்னர், நடுப் பகலில் கிரேக்க நாட்டு தெருக்களில் அறிஞன் சாக்ரடீஸ் நீதியைத் தேடியது போன்று, பழைய சமஷ்டித் தலைவர்களின் பாராளுமன்ற ராஜினாமாச் செய்தியை அவர் தேடி வருகிறாராம். அவர் மட்டு மென்ன, நாமும்தான் தேடுகிறோம்.

அண்மையில் திருக்கோணமலையில் நடைபெற்ற சமஷ்டிக் கட்சியின் தீர்மானப்படி, 5-வது சிம்மாசனப் பிரசங்கத்திற்குப் பின் சமஷ்டி கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் தமது பாராளுமன்ற ஆசனங்களை ராஜினாமாச் செய்யவேண்டும். சமஷ்டிக் கட்சியின் இந்த ராஜினாமாச் செய்தியைத்தான் நண்பர் சிவசுந்தரமும் நாமும் தேடுகிறோம். செய்தி என்னவோ இன்னும் வெளிவந்ததாக இல்லை.

ஆனால், மற்றுமொரு செய்தி வெளிவந்துள்ளது. சமஷ்டிக் கட்சியின் நாலு பாராளுமன்ற அங்கத்தவர்கள் தாம் தமது ஆசனங்களை ராஜினாமாச் செய்யப் போவதில்லை என்று அழுத்தந்திருத்தமாகக் கூறியுள்ளனர்.

இவர்களுக்குப் பாராளுமன்ற ஆசனத்தைவிடவா தமிழ் மக்களும், தமிழ் மொழியும் பெரிதாகிவிட்டன. ஒரு போதும் இல்லை. பாராளுமன்ற ஆசனத்திற்காகத் தம்மையே அர்ப்பணிக்கத் துணிந்துள்ள இவர்கள், தமிழ் மக்களை ஒரேயடியாகப் பலிகொடுத்தாலும் அது புதுமையில்லை!

சாட்டை

# ''வாலிபர் சக்தி அணுசக்திக்கு சமமானது''

## வாழைத்தோட்ட கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க பொதுக்கூட்டத்தில் உரை

''வாலிபர் சக்தி அணு சக்திக்குச் சமமானது. அணு சக்தி எப்படி ஆக்கத்திற்கும் அழிவிற்கும் பயன்படுகிறதோ, அதே போல, வாலிபர்களாகிய நாம் சரியான மார்க்சிஸ-லெனினிஸ சித்தாந்த அடிப்படையைக் கடைப்பிடித்து நமது சக்தியை நல்ல வகைகளின் ஆக்கத்திற்கும், தீயவைகளின் அழிவிற்கும் பயன்படுத்த வேண்டும்.''

இலங்கைக் கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளன கொழும்பு மாவட்டக் கமிட்டி உறுப்பினர் தோழர் காவகே, கடந்த 28-6-64 ஞாயிறு காலை 10 மணியளவில் தோழர் டி. கலைதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வாழைத் தோட்ட கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க பொதுக் கூட்டத்தில் பேசும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொழும்பு மாவட்டக் கமிட்டி உறுப்பினர் தோழர் மரியதாசன், 'சங்கம் எதிர்காலத்தில் இயங்கவேண்டிய வழிமுறைகளைப்' பற்றி விளக்கினார்.

''வாழைத்தோட்ட கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் இது காலவரை இயங்கிவந்த முறையையும், இனிமேல் கொண்டு இயங்குவதற்கான வேலைத் திட்டங்களையும்'' தோழர் எஸ். சிவராமன் விளக்கினார். தோழர் ஏ. சி. எஸ். அமீது கூட்டத்தை ஆரம்பித்தார். சிற்றுண்டி வைபவத்தின் பின் நடைபெற்ற நடப்புவருட நிர்வாகிகள் தேர்வில்:

தோழர் டி. கலைதாசன் தலைவராகவும், தோழர் எம்.சி. எம். மொஹிடீன் உப-தலைவராகவும், தோழர் ஏ. சி. எஸ். ஹமீது செயலாளராகவும், தோழர் எஸ். ஏ. அழகேசன் பொருளாளராகவும், தோழர் எஸ். சிவராமன் அமைப்புச் செயலாளராகவும், தோழர் என். எம். எம். பரீக் வாசிகசாலை பொறுப்பாளராகவும், தோழர்கள், டபிள்யு. டபிள்யு. ஜினதாஸ, பி. எம். எச். மொஹிதீன், பாருக் ஆகியோர் கமிட்டி உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்ட பின்னர், தோழர் எஸ். ஏ. அழகேசன் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

## கொழும்பு வாலிபர் உதைப்பந்தாட்டப் போட்டி

### 18-ந் தேதி ஆரம்ப விழா

கொழும்பு வாலிபர் உதைப்பந்தாட்டச்சங்கத்தினரால் நடத்தப்படும் ''வாலிபர்'' வெற்றிக் கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டியின் ஆரம்ப ஆட்டத்தை இம்மாதம் 18-ந் திகதி சனிக்கிழமை கொழும்புநகரசபை ஸ்டேடிய அரங்கில் வெகு விமரிசையாக நடாத்துவதென மேற்படி விளையாட்டுச் சங்கத்தின் அமைப்புக்குழு தீர்மானித்துள்ளது.

இவ் ஆரம்ப விழாச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றும் பத்தொன்பது விளையாட்டுச் சங்கங்களின் வர்ண உடை அணிவகுப்பைத் தொடர்ந்து முதலாவது ஆட்டம் அளுத்கடை யுனைடெட் ரேஞ்சர்ஸ் குழுவினருக்கும், கொள்ளுப்பிட்டி ரேஞ்சர்ஸ் குழுவினருக்குமிடையே நடைபெறும். இலங்கை கியூபா ஸ்தானிகர், லுயிஸ் மாறிஸி பிரதான அதிதியாகக் கலந்துகொள்வார்.

இம் முதலாவது ஆட்டத்தைத் தொடர்ந்து பிளேமிங் எரோஸ் குழுவினருக்கும், வேல்ஸ் ரேஞ்சர்ஸ் குழுவினருக்குமிடையே இரண்டாவது ஆட்டப் போட்டியும் நடைபெறும்.

இச் சிறப்புமிக்க விழா வைபவத்தைவெகுவிமரிசையாகக் கொண்டாட பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்யுமுகமாகக் கிளை விளையாட்டுச் சங்கங்களின் பிரதிநிதிகளின் கூட்டம் கடந்த சனிக்கிழமை அதன் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்வதற்கென பல விளையாட்டுச் சங்கங்களின் ஆயத்தக் குழுவும் அமைக்கப்பட்டு, அணிவகுப்புப் பயிற்சிக்கான ஒத்திகையை 12-ந் தேதி ஞாயிறு காலை9மணிக்குநடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

30-8-64-ல் நடைபெறப் போகும் ''புரட்சிகர ஆட்ஸ்ட் வாலிபர் மாநாடிகற்கு'' கலை நிகழ்ச்சிகள் தர விரும்பும் வாலிபர் சங்கங்கள், உடனடியாக அமைப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

தோழமையுள்ள,
சி. இராஜா
அமைப்பாளர், யா.பி.க. ம.மு. வாலிபர் சம்மேளனம்.

வவுனியா

## பாவற்குளத்தில் விவசாயிகள் சங்கம்

அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் கிளையொன்று பாவற்குளம் குடியேற்ற திட்டத்தில்18-6-64ல் ஸ்தாபிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் தோழர் ஆரியவன்ச குணசேகரா தலைமை தாங்கினார். அவரது தலைமையுரையில் விவசாயிகள் சங்கம் அமைக்கவேண்டிய அவசியத்தை விளக்கிக் கூறினார். அத்தோடு சோஷலிஸ நாடுகளில் விவசாயிகள் அடைந்திருக்கும் முன்னேற்றத்தை எடுத்துரைத்தார்.

கிளைத் தலைவராக தோழர் ஹரி அபேரத்தினவும், காரியதரிசியாக எஸ். கிருஷ்ணபிள்ளையும், பொருளாளராக எஸ். பி. மனிக் அப்புவும், மற்றும் 25 பேரைக்கொண்ட நிர்வாகக் குழுவும் நியமிக்கப்பட்டது.

வெளிவந்துவிட்டது
கம்யூனிஸ்ட்
மார்க்சிஸ-லெனினிஸ தத்துவ ஜூன் மாத இதழ்
ஆசிரியர்: நா. சண்முகதாசன்
கிடைக்குமிடம்: 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2

# கேரளத்தில் எமது தோழர்கள் வெற்றி

## திரிபுவாதிகள் தொலைந்தனர்

கேரளத்திலுள்ள திருவேந்திரம் நகர சபைக்குரிய தேர்தல் கடந்த ஜூன் 26-ந் தேதிநடைபெற்றது45அங்கத்தவர்களைத் தெரிவு செய்ய நடந்த இத் தேர்தல், கேரளத்திலுள்ள எல்லா அரசியல் கட்சிகளினதும், மக்களினதும் பூரண கவனத்தைப் பெற்றிருந்தது. இதற்கு நாலு காரணங்கள் உண்டு.

1. 1965 ஆரம்பத்தில் நடைபெறவிருக்கும் கேரள சட்ட சபை தேர்தலுக்கு முன் நடைபெறும், கடைசி ஸ்தல ஸ்தாபனத் தேர்தலாகும்.
2. பிரதமர் நேருவின் மறைவுக்குப்பின் நடைபெற்ற தேர்தல்.
3. திருவேந்திரம் நகரத்தில் அதிக செல்வாக்குப் பெற்றவராகக் கருதப்பட்ட பி. எஸ். பி. தலைவர் பட்டம் தாணுப்பிள்ளை, பி.எஸ்.பி.க்குஇரண்டகம்செய்துவிட்டு கவர்னரான பின்னர் நடைபெறும் முதல் தேர்தல்.
4. கம்யூனிஸ்ட் கட்சியினுள் பிளவு ஏற்பட்ட பின்னர் நடைபெற்ற முதல் தேர்தல்.

இதனால், இத் தேர்தல் முடிவுகளை கேரள மக்கள் மட்டுமின்றி, இந்தியா பூராவுமே கவனத்துடன் எதிர்பார்த்திருந்தது.

தேர்தல் முடிவுகள், திருவேந்திரம் நகரில் பி.எஸ்.பிக்கிருந்த செல்வாக்குத் தகர்ந்துவிட்டதைக் காட்டுகிறது. சென்ற தடவை, இந்த நகர சபை நிர்வாகத்தை ஏற்று நடத்திய பி.எஸ்.பி. க்கு இந்தத் தேர்தலில் 13 ஸ்தானங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. காங்கிரஸ் பெரும் கஷ்டத்தில் 10 ஸ்தானங்களைப் பெற்றுள்ளது.

சென்ற நகரசபையிலே, 3 ஆதரவாளர்கள் போக, கம்யூனிஸ்ட் கட்சிக்கு 3 ஸ்தானங்களே இருந்தன. இந்தத் தேர்தலில் திரிபுவாத சாக்கடைகள், மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகளைவிட பி.எஸ்.பி.யை நேச நண்பர்களாகக் கருதி அவர்களுடன் கூட்டு சேர்ந்துபோட்டியில் நின்றன. அதே நேரத்தில், மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகள் இந்த நகரிலுள்ள சகல முற்போக்கு சக்திகளையும் ஓரணி திரட்ட மார்க்கம் காட்டினர். தேர்தல் பிரச்சார காலங்களில், பி.எஸ்.பி.யுடன் சேர்ந்து கொண்டு மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகள் மீது வசைமாரி பொழிந்தனர் திரிபுவாத கழிசடைகள். இதன் மூலம் மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகளை முறியடிக்க அவர்கள் கனவு கண்டனர்.

ஆனால், நடைபெற்றதென்ன? திரிபுவாதிகளுக்கு, பி.எஸ்.பி. யுடன் கூட்டாகப் பிரச்சாரம் நடத்தியும் கூட, ஒரு தொகுதியில் கூட வெற்றி பெற முடியாது போய்விட்டது. ஆனால், 8 மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகளும், 3 ஆதரவாளர்களும் மகத்தான வெற்றி யீட்டினர். மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகளின் ஆதரவில் 4 ஆர்.எஸ்.பி. அபேட்சகர்களும்வெற்றி பெற்றனர்.

இந்திய மக்கள் கேட்கும் கேள்வி இது-இதிலிருந்து பாடம் கற்று திரிபுவாதிகள் திருந்துவார்களாஅல்லது கேரளத்திலும்மற்றும்நாடெங்கிலுமுள்ள புரட்சிகர சக்திகளுக்கு எதிராகக் காங்கிரஸுடன் கூடிக் குலாவுவார்களா?

# 21 கோரிக்கைகளுக்கான போராட்டத்திற்கு இன்றே தயார்

## தொழிற்சங்க ஐக்கியத்தை உடைத்த திரிபுவாதிகள் மன்னிக்கப்படமாட்டார்கள்



தோழர் குலவீரசிங்கம்

எமது 14-வது வருடாந்தக்கூட்டம் நடந்து ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன. இந்தக் காலக் கூட்டத்தில் தேசிய ரீதியிலும், சர்வதேசிய ரீதியிலும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

### சர்வதேசிய ரீதியில்

சர்வதேசியரீதியாகக்கடந்த காலம் மேலும் நசுக்கப்பட்ட மக்களுக்குச் சாதகமாக மாறியுள்ளது. உலக சோஷலிஸ இயக்கம் தனது வளர்ச்சியில் புதிய கட்டத்தை அடைந்து, சர்வதேச ரீதியாக அதன் செல்வாக்கு துரிதமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இன்று உலக சோஷலிஸ அமைப்பு முறை சரித்திரத்தின் வளர்ச்சியில் தீர்க்கமான சக்தியாக மாறியுள்ளதுடன், ஏகாதிபத்திய சக்திகளிலும் பார்க்க பலம் வாய்ந்ததாகவுமுள்ளது. ஆசிய, ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளின் தேசிய விடுதலை இயக்கம் என்றுமில்லாதளவு துரிதமடைந்துள்ளது-அடைந்து வருகிறது.

முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில், பாட்டாளி வர்க்க இயக்கங்கள் என்றுமில்லாதளவு வளர்ச்சியடைந்துள்ளதுடன், ஏகாதிபத்திய காலனி ஆதிக்கமுறை அதன் இறுதிக்கட்டத்தை அடைந்து வருகின்றது.

உலக சக்திகளின் பலம், சோஷலிஸத்திற்குச் சாதகமான அடிப்படையில் மாறியுள்ளது. ஏகாதிபத்தியவாதிகள், மக்களின் வாழ்வை நிர்ணயித்த காலம் மலையேறிவிட்டது. காலனியாதிக்க, விடுதலை பெறுத நாடுகளில் நசுக்கப்பட்ட மக்களின், ஆற்று வெள்ளம் போல் பெருகிவரும் புரட்சிகரப் போராட்டங்கள், அந்நாட்டு மக்களின் தேசிய விடுதலையை ஸ்திரப்படுத்தியுள்ளது; ஏகாதிபத்தியத்தின் முதுகெலும்பை முறித்துவிட்டது. பெருமளவில் உலக சமாதானத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் உதவியுள்ளது.

ஏகாதிபத்தியம் தனது ஊடுருவலையும், ஆக்கிரமிப்பு முறைகளையும் கைவிடவில்லை, இன்னும் அது பிரதான வைரியாகவேயுள்ளது. இன்று தென் வியட்நாம், லாவோஸ், கம்போடியா, வெனிசுவலா, கொங்கோ, அங்கோலா ஆகிய நாடுகளின் தேசிய விடுதலை இயக்கங்களை முறியடிப்பதற்காக ''உள்நாட்டு விசேஷ யுத்தங்கள்'' என்ற கொள்கையைக் கடைப்பிடித்து, அதன் மூலம் ஏகாதிபத்தியம் மக்களுக்கு பல இன்னல்களை விளைவித்து வருகின்றது.

### சுய ரூபம்

''டைம்'' வார சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டபடி. அமெரிக்க வெளிநாட்டுக் காரியதரிசி பேசிய பேச்சு, அவர்களின் சூழ்ச்சிகளுக்கு மேலும் ஆதாரமாக உள்ளது. லாவோஸ், தென்வியட் நாம்போராட்டங்களை முறியடிக்க மேலும் துரிதப்படுத்துவதற்காக திடமாக அமெரிக்கா செயலாற்றும் என்று அவர் கூறியுள்ளார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உண்மையான தன்மையையும், சுயரூபத்தையும் இது வெளிக்காட்டுகிறது. ஆதலால் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், தேசிய விடுதலையை உறுதிப்படுத்தவும், சமாதானத்தின் முன்னேற்றத்திற்கும் போராடும் மக்கள் மிகவும் உசாராக இருக்கவேண்டியது மிக அவசியம்.

இந்தக் காலகட்டத்தில், ஏகாதிபத்தியவாதிகளும், உள்நாட்டுப் பிற்போக்குவாதிகளும், தொழிலாளி வர்க்கத்திற்கும், முற்போக்கு முழு இயக்கங்களுக்கும் எதிராக தமது தாக்குதலை துரிதப்படுத்தினர். 1959-ம் ஆண்டு, மக்கள் ஐக்கிய முன்னனி கூட்டரசாங்கத்தை முறியடிப்பதில்வெற்றி கண்டனர். மந்திரி சபையில் நெருக்கடியை உருவாக்கினர், இறுதியில் பிரதமர் எஸ். டபிள்யூ, ஆர். டி. பண்டாரநாயகா கொலை செய்யப்பட்டார்.

### இடதுசாரி முன்னணி

1960-ம் ஆண்டு, மார்ச் மாதம் நாட்டில் ஓர் பொதுத் தேர்தல் நடந்தது. இடதுசாரிகள் மத்தியிலும், முற்போக்கு சத்திகள் மத்தியிலும் ஐக்கியமின்மையால், பிற்போக்க யூ. என். பி. மறுபடியும் ஆட்சி பீடம் ஏறும் வாய்ப்புக்கள் தோன்றின. ஆனால், 1960, ஜூலை மாதம் ஓரளவு ஐக்கியம் ஏற்பட்டதன் விளைவாக, முற்போக்கு சக்திகளினால் யூ. என். பியைத் தோற்கடிக்கவும், திருமதி. பண்டாரநாயக்காவின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை ஸ்பாபிக்கவும் முடிந்தது.

இந்த காலகட்டத்தில் ஏற்பட்ட மற்றுமொரு முக்கிய சம்பவந்தான், இடதுசாரி ஐக்கிய முன்னனியின் தோற்றம். இந்நாட்டு தொழிலாளர் வர்க்கமும், தொழிற் சங்க இயக்கமும், இந்த ஐக்கியம் தமது நீண்டகால இலட்சியமான சோஷலிஸத்திற்கு துரிதமான பாதையை வகுக்கும் என ஆவலுடன் எதிர்ப்பார்த்தனர். எமது அங்கத்தவர்கள், இடதுசாரி ஐக்கிய முன்னனியின் தோற்றத்தை மனப்பூர்வமாக ஆதரித்தனர். 1963-ம் ஆண்டு, ஆகஸ்ட் 12-ம் திகதி சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்திலும் எமது அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். அண்மையில் நடந்த சம்பவங்கள் இடதுசாரி ஐக்கிய முன்னணி, இந்நாட்டுத் தொழிலாளி வர்க்கத்தின் அபிலாஷைகளுக்கிணங்க நடந்துகொள்ள வில்லை என்பதை நிரூபிக்கின்றன. பல வருடங்களாக தொழிலாளி வர்க்கத்திற்காகப் போராடிய இடதுசாரித் தலைவர்கள், முதலாளித்துவ ஸ்ரீ லங்கா அரசாங்கத்தின் ஒரு சில மந்திரிப் பதவிகளுக்காக தொழிலாளி வர்க்கத்தின் நன்மைகளை காற்றில் பறக்கவிடத் தயாராகி விட்டனர்.

இன்று இடதுசாரி ஐக்கிய முன்னணி சீர் குலைந்து-மறுபடியும் இடதுசாரி இயக்கம் பிளவுபட்டுள்ளது. இந்த அசம்பாவிதம் நடைபெற்றது கவலைக்குரிய விஷயமாகும்.

### பொருளாதாரம்

இந்த நாட்டுப் பொருளாதாரம் இன்னும் பின்தங்கியதாகவே உள்ளது. பெரும் தோட்டங்களும், ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகமும், வர்த்தகத்தின் முக்கிய பகுதிகளும் இன்னும் அந்நியர்களின் கையிலேயே உள்ளன. திருமதி. பண்டாரநாயக்காவின் அரசாங்கம், ஆட்சிபீடம் ஏறிய பின், பெற்றோல் இறக்குமதியையும், விநியோகத்தையும் தேசிய மயமாக்கியுள்ளது. இலங்கை வங்கி தேசிய மயமாக்கப்பட்டுள்ளது. ஏனைய வர்த்தக வங்கிகள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளன. ஆயுள் காப்புறுதி (இன்சூரன்ஸ்) யும் தேசிய மயமாக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் முற்போக்கான நடவடிக்கைகள், ஏகாதிபத்தியத்திற்கெதிரான நடவடிக்கைகள் என்பது உண்மையென்றாலும், இந்த நடவடிக்கைகள் மட்டும் அடிப்படையில் இந்த நாட்டுப் பொருளாதாரத்திற்குண்டான குணும் சத்தை மாற்றவில்லை.

> கடந்த 27-28-ந் தேதிகளில் நடைபெற்ற தேயிலை, ரப்பர், தெங்கு மற்றும் பொது உற்பத்தித் தொழிலாளர் சங்கத்தின் 15-வது வருடாந்த விழாவில், பொதுச்செயலாளர் தோழர் கே. குலவீரசிங்கம் சமர்ப்பித்த அறிக்கையின் சுருக்கத்தை இங்கு தந்துள்ளோம்.

## தேயிலை, ரப்பர், தெங்கு மற்றும் பொது உற்பத்தித் தொழிலாளர் சங்க வருடாந்த கூட்டத்தில் பொதுச்செயலாளர் உரை

வாழ்க்கைச் செலவு மேலும் என்றுமில்லாதளவு உயர்ந்துள்ளது. அத்தியாவசியப் பொருட்கள், உணவுப் பொருட்கள் ஆகியவைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதுடன், அவற்றின் விலைகளும் அளவுக்கு மிஞ்சி உயர்ந்துள்ளன. அபிவிருத்தி மற்றும், அவசியமான சமூக-பொது சேவைகளுக்கான செலவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

1959-ம் ஆண்டு வாழ்க்கைச் செலவுப் புள்ளி 105. 2 ஆக இருந்தது. சம்பள நிர்ணய சபையின் தீர்மானப்படி தேயிலை, ரப்பர் ஏற்றுமதி வர்த்தகத்தில் வேலை செய்யும் பயிற்றப்படாத தொழிலாளி நாளுக்கு ரூபா 3[46 பெற்றான். இன்று வாழ்க்கைச் செலவுப் புள்ளி 112. 7 ஆக உயர்ந்துள்ளது. ஆனால், இத்தொழிலாளி இன்று ஒரு நாளுக்கு ரூபா 3/58 தான் பெறுகிறான். 1958-ம் ஆண்டு சம்பளத்தில் 8 சதம் மட்டுமே கூடியுள்ளது.

1958-ம் ஆண்டு நாம் நடத்திய 36 நாள் வேலை நிறுத்தம் எமது அங்கத்தவர்களுக்கு ஞாபகமிருக்கும். இந்த வேலை நிறுத்தம் அரசாங்க அளவுப் பஞ்சப்படிக்காக மிகவும் தீவிரமாக நடத்தப்பட்ட போராட்டம். இறுதியில் பஞ்சப்படியில் 87 சதம் மேலதிகமாகம் பெற்று நாம் வெற்றிபெற்றோம். ஆனால் இந்த உயர்வு, இன்று உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவுக்குப் போதாதது.

அரசாங்கம் ஓர் சம்பள உயர்வுக் கட்டுப்பாட்டுக் கொள்கையை நிர்ணயிக்கின்றது. அதன்பின் நடந்த எல்லாத் தொழிலாளி வர்க்கப் போராட்டங்களையும், பொலிஸையும், இராணுவத்தையும் பாவித்து அரசாங்கம் முறியடித்தது. உழைக்கும் மக்களின் பிரச்சினைகளை அரசாங்கத்தினால் தீர்க்கமுடியவில்லை. அதற்குப்பதிலாக பல அடக்குமுறைகளைப் பாவித்து தொழிலாளி வர்க்கத்தின் நியாயமான நடவடிக்கைகளை முறியடிக்க முயலுகிறது.

இதிலிருந்து தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியம் என்றையும்விட இன்று மிக அவசியமாகின்றது. தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளுக்காகப் போராடுவதற்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், வேலை முறைகளைச் சீர்படுத்தவும் இத்தகைய ஐக்கியப் போராட்டங்கள் மிகவும் அவசியம்.

### இருபத்தொரு கோரிக்கைகள்

தொழிலாளி வர்க்கத்திற்கு மிகவும் முக்கியமான 21 கோரிக்கைகளை மற்றைய தொழிற் சங்க மத்திய ஸ்தாபனங்களுடன் சேர்ந்து, ஒன்றுதிரட்டும் முயற்சியில் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் எடுத்துக்கொண்டு முயற்சிகள் எமது சங்கத்திற்குப் பெருமையளிக்கிறது. இக்கோரிக்கைகள் சம்பள உயர்வு, கூடிய விடுமுறைகள், லீவு வசதிகள், சமூகப் பாதுகாப்பு நலன்கள், தொழிற் சங்க, ஜனநாயக உரிமைகளை அடங்கியதாகும். இந்த நாட்டுத் தொழிலாளர்கள் மத்தியில் 21 கோரிக்கைகளைப் பிரச்சாரப் படுத்துவதற்குண்டான முயற்சியில் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனமும், தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டியும் எடுத்த சகல முயற்சிகளிலும் எமது சங்கம் முக்கிய பங்கெடுத்துள்ளது. இக்கோரிக்கைகள் இதுவரையும் அரசாங்கத்திற்கோ, முதலாளிமாருக்கோ சமர்ப்பிக்கப்படாதிருப்பது கவலைக்குரிய விஷயமாகும். இனியும் தாமதிக்காது இக்கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு எம்மாலான சகல முயற்சிகளையும் நாம் எடுக்கவேண்டும்.

எங்களைப் பொறுத்த மட்டில், இக்கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக எடுக்கப்படும் எத்தகைய முயற்சியிலும் நாம் பங்கு கொள்வோம் என்று இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்திற்கும், கூட்டுக் கமிட்டிக்கும் நாம் உறுதி கூறுகின்றோம்.

### சர்வதேசிய ஸ்தாபன அங்கத்துவம்

எமது சங்கம் வர்த்தகத் தொழிலாளரின் சர்வதேசிய தொழிற் சங்கத்தில் அங்கம் வகிக்கின்றது. இச்சங்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் நாமும் ஒருவர் என்பதில் நாம் பெருமையடைகிறோம். இரண்டாவது வர்த்தகத் தொழிலாளர்களின் சர்வதேசிய மாநாடு போலந்தின் தலைநகரான வார்ஸாவில் 1964-ம் ஆண்டு, மே மாதம், 18-21 திகதிகளில் நடைபெற்றது. உங்கள் பொதுச் செயலாளர் இம்மாநாட்டில் கலந்து கொண்டார். சர்வதேசிய தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கு இம் மாநாடு ஒரு பெறும் வெற்றி என்பதை நாம் கூறுவதில் பெருமையடைகிறோம். இம்மாநாட்டில் பங்குபற்றியவர்கள் மீது, திரிபுவாதிகளால் தமது கொள்கைகளைத் திணிக்க முடியவில்லை. அவர்கள் எடுத்த சகல முயற்சிகளும் தோல்வியடைந்தன. இதற்குக் காரணம் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்கப் பிரதிநிதிகளின் முக்கியப் பங்கேயாகும்.

கடந்த காலங்களில் எமது சங்கம் எமது அங்கத்தவர்களுக்கு பல பொருளாதார மற்றும், கோரிக்கைகளை வென்றெடுத்துள்ளது. இந்த வெற்றிக்கு முக்கிய காரணம் தேயிலை, ரப்பர் ஏற்றுமதி வர்த்தகத்திலும், தெங்குப் பொருள் உற்பத்தி வர்த்தகத்திலும் இருந்த ஒரே ஒரு தொழிற் சங்கம் எமது சங்கமேயாகும். எமது சங்கத்திற்கு நீண்ட சரித்திரம் உண்டு. இது 1943-ம் ஆண்டு நிறுவப்பட்டது. சம்பள உயர்வு, பொருத்தமான தொழிற் சட்டங்கள், தொழில் வசதிகள் போன்றவற்றிற்கான பல போராட்டங்களில் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் வீரமுடன் கலந்துகொண்டனர்.

தோழர்களே, இந்தக் காலக்கட்டத்தில் இன்னுமொரு முக்கிய சம்பவத்தை ஞாபகப்படுத்த அனுமதியுங்கள். எமது சங்கத்தினுள் திரிபுவாதம் புகுந்துள்ளது பற்றியே நான் குறிப்பிடுகிறேன். திரிபுவாதம் தொழிலாளி வர்க்கத்திற்குப் புறம்பான கொள்கை. எல்லாவிதமான வர்க்கப் போராட்டங்களையும் அது எதிர்த்து நிற்கிறது. தொழிலாளி வர்க்கத் தலைமையின் அவசியத்தை அது மறுக்கிறது. சகல திரிபுவாதிகளும், ஏமாற்றையும் பொய் புரட்டையும் தமது சீர்குலைவு வேலைகளுக்குப் பாவிக்கின்றனர். அவர்கள் திட்டமிட்டு போலிக்கண்டனங்கள், துர்ப்பிரச்சாரங்கள் செய்கின்றனர், செய்வர்.

### திரிபுவாத தீவெட்டிகள்

தோழர்களே, இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் முன்னைநாள் தலைவர் எம். ஜி. மெண்டிஸ், சம்மேளனத்தின் 16-வது மாநாட்டிலிருந்து, அவரது தலைமை

—8-ம் பக்கம் பார்க்க

# "ஆறு மாத காலத்தில் எம் கட்சியின் அமோகப் பணி"

## "முதலாளித்துவத்தை அரவணைக்கும் திசையில் விக்ரமசிங்கா, பீட்டர் கெனமன் கும்பல் ஓட்டம்"

"ஈழத்திலுள்ள திரிபுவாதிகள் எங்கே சென்று கொண்டிருக்கிறார்கள், அவர்களின் திசை மார்க்கம் எது? என்பதை திருவாளர் ஸ்டான்லி திலகரத்தினவின் சமீபத்திய நடவடிக்கை தெள்ளத் தெளிவுபடுத்தி விட்டது. ஸ்டான்லி திலகரத்தின அதிவேகத்தில் விஷயத்தை முடித்துவிட்டார். ஆனால், பீட்டர் கெனமன், விக்கிரமசிங்கா கும்பல், தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டு, முதலாளித்துவக் கும்பலை அரவணைக்கும் திருக்கைங்கரியத்தை குறைவான வேகத்தில் செய்து வருகிறது. இதுதான் வித்தியாசம். ஆனால், சீக்கிரமே இவர்கள் எல்லோரும் ஒரே குட்டையில் உழலப் போவது என்பது மட்டும் திண்ணம்."

இவ்வாறு, கடந்த 3-ந்தேதி மருதானை சஹிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைக் கம்யூனிஸ் கட்சியின் 21-வது ஆண்டுவிழாப் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய தோழர் என். சண்முகதாசன் குறிப்பிட்டார்.

தோழர் சிரிவர்தனவின் தலைமையில் நடைபெற்ற இப் பொதுக் கூட்டத்தில் தோழர் சண்முகதாசன் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

### சாத்தியமா?

"இன்று நம் கட்சியின் 21-வது ஆண்டுவிழா. இதைக் கொண்டாடுகின்ற அதே வேளையில், கட்சியில் முழுநேர ஊழியனுகச்சேர்ந்து 21ஆண்டுகள் கடைமையாற்றியதையும் இன்று நான் கொண்டாடுகிறேன். எமது கட்சி ஈழத்துத் தொழிலாள வர்க்கத்திற்கும், முற்போக்கு சக்திகளுக்கும் சரியான வழிமார்க்கத்தை இன்று காட்டிக்கொண்டிருக்கிறது. கொள்கை அடிப்படையில் ஐக்கிய முன்னணி உருவாக்கி, தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஈழத்து முற்போக்கு சக்திகள் முன்னேறினுலன்றி நமக்கு வெற்றிமார்க்கமில்லை" என்று கூறினர்.

காலனி பொருளாதார அமைப்பின் கீழ், இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிதீட்ட முனையும் சிலரைக் கண்டித்த தோழர் சண்முகதாசன் குறிப்பிட்டதாவது:

"இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு ஜீவனுகத் திகழும் தேயிலை, ரப்பர் தோட்டங்கள் இன்றும் கூட விதேசிகள் கையில், குறிப்பாக வெள்ளைக் கொள்ளையர் கைகளிலேயே இருக்கின்றன. மறுபுறத்தில் நமது பொருளாதார வளர்ச்சிக்கு உயிராகவுள்ள வங்கிகளும், ஏற்றுமதியும் இன்றும் வெளிநாட்டார் கையிலேயே உள்ளது. இந்த நிலையில், இந்நாட்டின் முன்னேற்றம் சாத்தியமா? ஒரு போதும் இல்லை" என்றார் தோழர் சண்முகதாசன்.

### பகற்கனவு

அடுத்துப் பேசிய தோழர் டி. கே. டி. ஜினேந்திரபால, "மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகளாகிய நாங்கள், திரிபுவாத பீட்டர்கெனமன் கும்பலை கட்சியிலிருந்து வெளியேற்றிய வேளையில், சக்தியற்று, உயிரற்று அவர்கள் ஐக்கிய முன்னணியின் பெயரில், அந்த அட்டைப் பலகையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு வாழ முற்பட்டனர். இன்று அந்த அட்டைப் பலகைக்கும் ஆபத்து ஏற்பட்டு விட்டது. ஆனால், பீட்டர் கெனமன் மாத்திரம், இன்னும் ஐக்கிய முன்னணி இருப்பதாகத் தனது நம்பிக்கையைத் தெரிவித்து உயிர் வாழ்கிறார். இவரின் பகற் கனவு கலையும் காலம் வெகுதூரத்திலில்லை" என்று கூறினர்.

### உடைப்பதே வேலை

தோழர் என்.எல். பெரேரா பேசுகையில், "ஐக்கிய இடதுசாரி முன்னணியின் "தலைவர்கள் என்று கூப்பாடு போட்டு வந்தவர்கள், இன்று மட்டுமல்ல, என்றுமே முற்போக்கு சக்திகளின் ஐக்கியத்தை உடைத்துவந்தவர்களே. இவர்களின் ஒரே நோக்கம், ஒரே கொள்கை பாராளுமன்றத்தில் அதிக ஆசனம் பெற்று மந்திரியாவதே. உள்ளத்தில் ஊறிப் போயிருந்த எண்ணம், சதா காலமும், எல்லாக் கொள்கைகளையும் இதே அடிப்படையிலேயே உருவாக்க இவர்களைத் தூண்டியது. இடதுசாரி ஐக்கிய முன்னணியை தகர்க்க இதுவே காரணமாக இருந்தது" என்றார்.



தோழர் பிரேமலால் குமாரசிரி

தொடர்ந்து பேசுகையில், "எங்கள் கட்சி பட்டம் பதவி பெற்றவர்களையோ, பாராளுமன்ற ஆசனம் உள்ளவர்களையோ இன்று கொண்டிருக்கவில்லை. பாராளுமன்ற ஆசனமும், பட்டம் பதவிகளும் இல்லாமல் ஜனங்களின் ஆதரவைப் பெற இயலாது, இயக்க முடியாது என்று கூறிவந்த பித்தர் கூட்டத்திற்கு எம் கட்சி முகத்தில் கரிபூசியுள்ளதுடன், சரியான பாடமும் கற்பித்துள்ளது. உண்மையான தொழிலாளி வர்க்கக் கட்சிக்குப் பட்டமும் பதவியும் அல்ல முக்கியம். அதற்கு வேண்டியது சரியான மார்க்சிஸ-லெனினிஸக் கொள்கை. தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின்மீது அசையாத நம்பிக்கை, ஊசலாட்டமில்லாத உறுதியான புரட்சிகர லட்சியம். இவைகளை எம் கட்சி இன்று பெற்றிருக்கின்ற காரணத்தினாலேயே அது வெற்றி மார்க்கத்தில் முன்னேறி வருகிறது" என்றார்.

### புனித கட்சிக்கு மாசு

தோழர் எச்.எம்.பி. முஹிதீன் பேசுகையில், "எம் கட்சி இன்று தனது 21-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது. இது புனிதமான தினம். இந்தத் தினத்தை, திரிபுவாதத் தீவெட்டிகளை நீக்கிவிட்டு, மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகளாகிய நாம் தனித்துக் கொண்டாடுவது பெருமைக்குரிய, பூரிப்படைய வேண்டிய விஷயமாகும். கம்யூனிஸ்ட் இயக்கம் தியாகத்தால் வளர்ந்தது. உலகெங்கும் அதன் வளர்ச்சிக்காகத் தமது குடும்பத்தை அர்ப்பணித்தவர்கள், தமதுசொத்து சுகங்களை அள்ளி அள்ளித் தந்தவர்கள், தமது உயிர்களைத் தத்தம் செய்தவர்கள், தூக்குமேடையை முத்தமிட்டவர்கள், இரத்தப் பலி பீடத்தைத் தயக்கமின்றி அரவணைத்தவர்கள் ஏராளம் ஏராளம். இவர்களின் தியாகத்தால் வளர்ந்ததே கம்யூனிஸ்ட் இயக்கம். இலங்கையைப் பொறுத்தும் கூட, எமது கட்சியின் வளர்ச்சிக்கு நூற்றுக் கணக்கான தோழர்களே தமது சொந்த சுகங்களையும், இன்ப வாழ்வினையும் உதறித் தள்ளிவிட்டு தியாகம் செறிந்த வாழ்வு நடத்தி வளர்த்திருக்கிறார்கள். இத்தகைய மகத்தான, மகோன்னத கட்சியின் புனிதமான தினத்தை நாம் இங்கு பயபக்தியோடு, எதிர்காலத்தை நம் கண்முன் நிறுத்திக் கொண்டாடுகின்ற இவ்வேளையில், கம்யூனிஸ்ட் போர்ட் மாட்டியுள்ள திரிபுவாதத் தீவெட்டிக் கூட்டம், பீட்டர் கெனமன் கும்பல் என்ன செய்கிறது? மக்கள் சந்தைபோட்டு மசால் வடையும், கருவாடும் விற்கிறது. திரிபுவாதத் தீவெட்டிகளே, புனிதமான கம்யூனிஸ்ட் இயக்கம் உங்களுக்கு செய்த துரோகமென்ன? பரிசுத்த மிக்க, தியாக வரலாற்றில் வளர்ந்த கம்யூனிஸ்ட் இயக்கத்தை ஏன் இப்படி மாசு படுத்துகிறீர்கள்?" என்றார்.

தொடர்ந்து பேசுகையில், "இன்று மசால்வடையும், கருவாடும் விற்கும் இக்கயவர் கூட்டம், தன்னை விற்கும் காலம் அதிக தூரத்திலில்லை. ஸ்டான்லி திலகரத்தினவைப் பின்பற்றும் பலம் ஏற்கெனவே திரிபுவாத தீவெட்டிகள் கூட்டத்தில்உருவாகிவிட்டது. சென்ற ஆண்டில், இதே தீவெட்டிகள் எம்மைப் பார்த்துக் கூறினார்கள், காலம் தீர்ப்பளிக்கும் என்று. ஆம், காலம் தீர்ப்பளித்து விட்டது; மீதம் உள்ளதற்கும் சீக்கிரமே காலம் தீர்ப்பளித்விடும்" என்றார்.

## கட்சியின் 21-வது ஆண்டுவிழாக் கூட்டத்தில் தலைவர்கள் முழக்கம்



தோழர் சண் பேசிக் கொண்டிருக்கிறார். படம்: கலே

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரேமலால் குமாரசிரி அடுத்து பேசியபோது கூறியதாவது:

### குற்றவாளிகள்

"இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 21-வது ஆண்டு விழாவைக்கொண்டாடும் இவ்வேளையில், நாட்டின் இன்றைய சூழ்நிலை பற்றியும், எம் கருத்து பற்றியும் சில வார்த்தைகள் கூற நான் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன். இன்றைய சூழ்நிலைக்கு பலர் பலரைக் குறை சொல்லாம். சமசமாஜக் கட்சித் தலைவர்களைத் திட்டலாம்! அல்லது, பிலிப் குணவர்தனவைத் தாக்கலாம். ஆனால், நான் இன்றைய நிலைக்கான முழு பொறுப்பையும் பீட்டர் கெனமன், விக்கிரமசிங்காமீதே சுமத்துகிறேன். அவர்கள் தான் இதற்கான முழு பொறுப்பையும் ஏற்க வேண்டியவர்கள்.

"இன்று இந்த நாட்டில் உருவாகியுள்ள நிலையை, தீர்க்க தரிசனத்துடன் நாங்கள் திரிபுவாதக்கூட்டத்திற்கு மத்தியக் கமிட்டியில் எடுத்துக் கூறினோம். மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தினோம். ஐக்கிய முன்னணி இத்தகைவ ரீதியில் அமையப்பெற வேண்டும் என்று விளக்கினோம். தொழிற் சங்க ஐக்கியம் இந்தெந்த ரீதியில் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று தெளிவுபடுத்தினோம். சுதந்திரக் கட்சி அரசாங்கத்தினதும், தேசிய முதலாளித்துவ சக்திகளினதும் போக்கை சரியான ரீதியில் மதிப்பீடுசெய்து கூறினோம். ஆனால், குருஸ்சோவின் கட்டளைத் தடிக்கு அடிதணிந்து, அவரின் இசைக்கு தக்கபடி ஆட்டம் போட்ட திரிபுவாத பீட்டர் கெனமன், விக்கிரமசிங்கா கும்பல் எங்கள் கருத்துக்களை அசட்டை செய்தது மட்டுமின்றி, எங்களை கட்சித் துரோகிகளாக்கி, ஐக்கிய முன்னணித் துரோகிகளாக நாட்டு மக்கள் மத்தியிலும், கட்சித் தோழர்கள் முன்பும் காட்ட முயன்றனர்.

### துரோகிகள் யார்?

"இன்று ஐக்கிய முன்னணியைத் தகர்க்கும் துரோகிகளாக மாறி இருப்பவர்கள் யார்? கட்சியை இழிவுபடுத்திவிட்டு, முதலாளிகளை அரவணைக்க முயல்பவர்கள் யார்? கட்சிக்குத் துரோகம் செய்பவர்கள் யார்? இலங்கையின் சோஷலிஸப் புரட்சி மார்க்கத்திற்குத் தடைக் கல்லாக உருவாகி இருப்பவர்கள்யார்? இதற்கு விக்கிரமசிங்கா, பீட்டர் கெனமன் கும்பல் பதில் சொல்லி ஆக்வேண்டும்.



தோழர் என். எல். பெரேரா

"பட்டம் பதவிகளும், பாராளுமன்ற ஆசனங்களும் பெற்ற பெரிய பெரிய ஆசாமிகளைப் பெற்ற கட்சிகளைவிட கடந்த 6 மாத காலத்தில் எம் கட்சி செய்துள்ள பணிகள் மகத்தானவை, நாம் பெருமைப்படத் தக்கவை. மார்க்சிஸ நூல்கள் வெளிக்கொண்டு வருவதிலும், மார்க்ஸிய சஞ்சிகைவெளியிடுவதுமூலம், மார்க்ஸிய வகுப்புக்கள் நடத்துவதுமூலம் இன்ன பிற துறைகளிலும் நாம் இந்த ஆறு மாத காலங்களில் ஆற்றியுள்ளதொண்டுகள் அளப்பரியவை. இதே ரீதியில் நாம் தொடர்ந்து இயங்கவேண்டும். நம் கட்சியை சக்திமிக்கதாக்க வேண்டும். இந்தப் பணியில் பூரணமாகப் பங்கெடுக்க இந்த புனித தினத்திலே சபதம் கொள்ளுமாறு கட்சித் தோழர்களையும், அனுதாபிகளையும், ஆதரவாளர்களையும்அறைகூவி அழைக்கிறேன்" என்றனர்.

---

மாக்சிஸ போதனைக் குழு
அரசியல்
பொருளாதாரம் பற்றிய
சொற்பொழிவுகள்

| பொருள்: | தேதி நேரம் |
|---|---|
| 1. பொருளாதார நெருக்கடிகளுக்கான காரணம் | 9-7-64 |
| 2. ஏகாதிபத்திய ஏகபோகத்தின் வளர்ச்சி | 21-7-64 |
| 3. சோஷலிஸப் பொருளாதாரம் | 30-7-64 |
| வகுப்புகள் ஆரம்பம் | 5 மணி |

இவ்வகுப்புகள் டரட் ரோட்டிலுள்ள செஞ்சிலுவை மண்டபத்தில் நடைபெறும். தற்போது ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே வகுப்புகள் நடைபெறும்.

சொற்பொழிவாளர்:

**சண்முகதாசன்**

குறிப்பு: இவ்வகுப்புக்கள் மார்க்சிஸ போதனைக் குழு அங்கத்தவர்களுக்கு மட்டுமே. இக் குழுவில் சேர விரும்புவோர் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

ஈ. டி. மூர்த்தி,
பிரான்சிஸ் பெரேரா,
கூட்டுக் காரியதரிசிகள்.

### முற்போக்கு இலக்கியம்

# வெறும் அறநெறி இலக்கியம் தேன் பூசப்பட்ட நச்சுப்பழம்

## அடக்கப்பட்ட மக்கள் ஆர்த்தெழ இலக்கியம் வழிகாட்ட வேண்டும்

### சாமி சிதம்பரனாரின் கட்டுரைக்கு விமர்சனம்

'தொழிலாளி'யில் நாம் ஆரம்பித்துள்ள ''முற்போக்கு இலக்கியப்'' பகுதி, வாசகர்கள் மத்தியிலும், இலக்கிய வட்டாரத்திலும் பெரும் வரவேற்பையும், கருத்துப் பரிமாறலையும் உருவாக்கியுள்ளது. இதையிட்டு நாம் மகிழ்கிறோம்.

சரியான, பிசகற்ற முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்கு வழிகாட்டும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பகுதி, எல்லாப் பகுதி மக்களுக்கும் தம் தம் அபிப்பிராயங்களைக் கூற வாய்ப்பளிக்கிறது.

முற்போக்கு இலக்கியம் பற்றிய உங்கள் கருத்துக்களை, ஒழிவு மறைவின்றி எழுதி அனுப்புங்கள்.

அண்மையில் நாம் வெளியிட்ட சாமி சிதம்பரனாரின் ''உயிருள்ள கவிதை'' என்ற இலக்கியக் கட்டுரைக்கு நண்பர் சுவாமிநாதன் எழுதியுள்ள விமர்சனக் கட்டுரையை இங்கு பிரசுரித்துள்ளோம். உங்கள் அபிப்பிராயங்களையும் எழுதுங்கள்.

வாரந்தோறும் வளர்ந்து வரும் ''தொழிலாளி''யில் இலக்கிய கட்டுரைகளும் இடம் பெறுவதை வாசகர்கள் வரவேற்கின்றனர். இன்றைய சமுதாயஅமைப்பின் சீர்கேடுகளை யதார்த்தரீதியாக ஆராய்ந்து, அவற்றை நிவர்த்திப்பதற்கு சோஷலிஸ ரீதியாக நாம் செயல்பட வேண்டும் எனும் தவிர்க்க முடியாத, விஞ்ஞான ரீதியான முடிவை பொதுமக்களின் மனத்தில் ஆழ்ந்து பதியும் வண்ணம் கலையம்சம் திகழ எழுதுவதே சிறந்த இலக்கியப் படைப்பு என்பதை இங்கு நாம் மனத்திற் கொள்ள வேண்டும். இலக்கியம் என்பது தான் என்ன? இலக்கியம் என்னும் பதம் ''இலட்சியம்'' என்னும் பதத்திலிருந்து பிறந்தது என அறிஞர் டி. கே. சி. கூறுகின்றார். எழுத்தாளனின் இலட்சியத்தை கலையம்சத்துடன் பிரதிபலிப்பதே அவன் படைத்த இலக்கியம். உயர்ந்த இலட்சியத்திலிருந்து பிறந்த இலக்கியமே உயிருள்ளது, என்றும் அழியாதது.

இங்கு ஒரு ''கம்யூனிஸ்டி''ன் இலட்சியம் தான் என்ன? என்பதை நாம் நினைவு படுத்தல் வேண்டும். இதுபற்றி ஜூலியஸ் பூசிக் கூறியது சென்ற வாரத் தொழிலாளியில் திரட்டித்தரப்பட்டுள்ளது: ''கம்யூனிஸ்டு''களாகிய நாம் வாழ்க்கையை நேசிக்கிறோம். எனவேதான் மகிழ்ச்சியும் நிறைவும் சுதந்திரமும் கூடிய இலட்சிய வாழ்வுக்கான பாதையை அமைக்கும் பொழுது குறுக்கிடும் தடைகளைத் தகர்த்தெறிவதில் எங்கள் உயிரையும் தியாகம் செய்ய எந்நேரத்திலும் நாம் தயங்குவதில்லை....மனிதன் உழைப்பை மனிதன் பறிக்கும் அராஜக அமைப்பின் கொடுமைகளிலிருந்து...விடுவிக்கப்பட்டு மகிழ்ச்சியும் நிறைவும் ஆரோக்கியமும் சுதந்திரமும் உள்ள மனிதனுக்கு இந்தப் பரந்த உலகில் ஒரு இடம் அளிப்பதற்காக எங்கள் சுகபோகங்களை தியாகம் செய்ய நாங்கள் ஒரு போதும் தயங்கமாட்டோம்... மனிதகுல சிருஷ்டி கக்திகள் அனைத்தையும், ஒவ்வொரு மனிதனின் சிருஷ்டி கக்தி முழுமையையும் பயன்படுத்தி முழு வளர்ச்சி அடையும்படி செய்யும் ஒரு அமைப்பைப் பெறுவதற்கான போராட்டத்தில் தமது முழு வலிமையைப் பயன்படுத்தவோ, தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.''

இந்த உயரிய இலட்சியத்தை அடையும் நோக்குடன் படைக்கும் இலக்கியமே ஜீவனுள்ளதும், சமுதாயத்துக்கு இன்றியமையாததுமாகும். மக்கள் பத்திரிகையாகிய ''தொழிலாளி''யில் வெளிவரும் கலைப் படைப்புக்கள் யாவும் இந்த அடிப்படையிலேயே அமைதல் வேண்டும் என ஒவ்வொரு கம்யூனிஸ்ட் வாலிபனும் விரும்புவான்.

இனி, ஜூன் 27-ம் திகதியின் ''தொழிலாளி''யில் வெளிவந்த ''உயிருள்ள கவிதை'' எனும் சாமி சிதம்பரனாரின் கட்டுரையை ஆராய்வோம். பட்டினத்தாரின் தனிப் பாடலொன்றை ஆராய்ந்து ஆராய்ந்து அதை ஓர் உயிருள்ள கவிதை எனக் காட்டுகிறார் சாமி சிதம்பரனார். முதலில் நாம் பட்டினத்தாரின் கவிதையை எடுத்துக் கொள்வோம்:

''நாப்பிளக்கப் பொய் உரைத்து
நவநிதியம் தேடி
நலன் ஒன்றும் அறியாத
நாரியரைக் கூடிப்,
பூப்பிளக்க எழுகின்ற
புற்றீசல் போலப்
புல புலெனக் கல கலகலெனப்
புதல்வர்களைப் பெறுவீர்!
காப்பதற்கும் வகையறியீர்
கைவிடவும் மாட்டீர்!
கவர் பிளந்த மாத்துளையில்
கால் நுழைத்துக்கொண்டே
ஆப்பு அதனை அசைத்துவிட்ட
குரங்குதனைப் போல
அகப்பட்டீர்! கிடந்து உழல
அகப்பட்டீரே!''

மிகவும் எளிய நடையில் யாவர்க்கும் புரியும் வண்ணம் இக் கவிதை புனையப்பட்டுள்ளது. சாமி சிதம்பரனார் பட்டினத்தாரைப்பற்றி பின்வருமாறு கூறுகிறார்: ''பட்டினத்தார் செல்வமுள்ள வராகச் சிறப்புடன் வாழ்ந்தார். உலக வாழ்வு நிலையற்றது; இறந்த பின் இவ்வுலகில் நாம் தேடி வைத்திருக்கின்ற எந்தச் செல்வமும் நம்முடன் வரப் போவதில்லை என்ற உண்மையை உணர்ந்து, உடனே கோவணத்தைக் கட்டிக் கொண்டு முற்றும் துறந்த துறவியானார்.''

பட்டினத்தாரின் மனப்போக்கு இலட்சியம் யாவற்றையும் நாம் இதிலிருந்து அறிய முடிகின்றது. பட்டினத்தாரின் எண்ணங்களைப் பிரதிபலிக்கிறது அவரின் இலக்கியப் படைப்பான இக் கவிதை. எமது நாட்டில் இன்னும் பல ''பட்டினத்தார்கள்'' வாழ்ந்தார்கள். இருந்துவிட்டுப் போகட்டும். அவர்களை நாம் வம்புக்கு இழுக்கவேண்டாம்! ஆனால், இவர்களின் கவிதை கட்டுரைகளை இன்றைய எழுத்தாளர்கள் தமது விமர்சனத்துக்கும் கட்டுரைகளுக்கும் கருப் பொருளாகக் கையாளும் போது, நாம் மிக்க விழிப்புடன் அவற்றைக் கவனித்தல் வேண்டும். ஏனெனில், இன்றைய எழுத்தாளர்கள் தமது எண்ணக் குவியல்களையும் இலட்சியங்களையும் கலையம்சத்துடன் வெளிப்படுத்துவதற்கு பண்டைய இலக்கியச் செல்வங்களை மிக்க நாசுக்காகக் கையாளலாம். அதற்கு அவர்களுக்குச் சுதந்திரம் உண்டு. துறவறத்தையேமேலானதாக எண்ணும் ஒரு எழுத்தாளன் அல்லது மதகுரு இக் கவிதையை சிலாகித்து எழுதலாம். பழைய வரட்டு வேதாந்தங்களையும் தன்னலத் துறவிகளையும் கிண்டல் செய்பவனும் இக் கவிதையை தனக்குச் சாதகமாக எடுத்து விமர்சிக்கலாம். ஆகவே ஒரு உயர்ந்த சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதில் ஈடுபட்டிருக்கும் நாம், இக் கவிதை எமது தொழிலாளியில் இடம்பெறும்போது எவ்வாறு கையாளப் பட்டிருக்கிறது என்பதில் மிக்க விழிப்புடன் இருத்தல் வேண்டும். ஆகவே, சாமி சிதம்பரனார் இக் கவிதையை எக் கண்ணோட்டத்துடன் நோக்குகின்றார் என்பதை அவரின் கட்டுரை படம் பிடித்துக் காட்டுகிறது. அவர் கூறுகிறார், ''இதில் சில உபதேச மொழிகளும்; அதாவது, அறிவுரைகளும் அடங்கியிருப்பதைக் காணலாம், பொய்யுரைத்துப் பொருள் தேடாதீர்கள், லஞ்சம் வாங்காதீர், கறுப்புச் சந்தையிலே பொருள் தேடாதீர்கள்.''

இத்தகைய அறிவுரைகள் பாட்டில் பொதிந்துள்ளதை நாம் இங்கு மறுக்கவில்லை. இதுபோலப் பன்னூற்றுக் கணக்கான பாடல்கள் தமிழ் இலக்கியத்தில் உண்டு. இவை யாவும் தனி மனிதனுக்கு சில அறநெறிகளைப் போதிக்கின்றன. இது உண்மை. இவற்றைப் போதிக்கும் அறிஞர்கள், யேசு, புத்தர், காந்தி உட்பட, தங்கள் இலட்சியத்தில் வெற்றியடையவில்லை! ஏன்! இவர்கள் யாவரும் வெறும் ஆத்மீக சீர்திருத்தவாதிகளாகவே விளங்கினார்களேயன்றி, மனித சமுதாய வரலாற்றை யதார்த்த ரீதியாக ஆராய்ந்து, சமுதாயத்தில் ஒரு சாரார் மற்றவர்களை எவ்வாறு சுரண்டத் தலைப்பட்டனர் என்பதையும், பண்டைக் கால கம்யூனிஸ சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியின் தோற்றமே இன்றைய சுரண்டலும் ஊழலும் மலிந்த முதலாளித்துவ சமுதாயம். ஆகவே இச்சமுதாயத்தில் தனி மனிதனுக்கு அறம் போதித்து சமுதாயத்தையே மாற்றி அமைத்து சுவர்க்கமாக மாற்றுவது இயலாத செயல், என்பதையும் இப் பெரியார்கள் அறியவில்லை. ஒருவேளை இவர்களிற் சிலர் அறிந்திருக்கலாம். ஆனால் எவ்வாறு இன்றைய வர்க்கச் சீர்கேடான சமுதாயத்தை அழித்து சுதந்திர சமுதாயத்தை சிருஷ்டிப்பது? என்பதற்கு வழி அறியாது தடுமாறி இருப்பார்கள்.

தனி மனிதனுக்கு வெறும் வேதாந்த அறநெறிகளைப் போதிக்கும் கவிதைகள், கதைகள், நாடகங்கள், நடனங்கள், போன்ற பற்பல கலைப் படைப்புக்கள் இன்று எம்மிடையே மலிந்துகிடக்கின்றன. இந்த ரீதியில் எழுதும் எழுத்தாளர்களுக்கும் குறைவில்லை. சாமி சிதம்பரனாரின் கட்டுரையும் இந்த ரீதியிலேயே செல்கின்றது. எனவே அவரும் வெறுமனே அறநெறி போதிக்கும் சீர்திருத்த எழுத்தாளராகவே தென்படுகிறார். கருத்தியலான அறநெறியைப் போதிக்கும் கலைப்படைப்புக்கள் தமிழிலும் பிறமொழிகளிலும் பலவுண்டு. இன்றைய சீர்கெட்ட சமுதாயத்தின் நோய்க்கு மருந்தாக இவை பயன்படவில்லை! பயன்பட்டிருப்பின் அவை உயிருள்ள இலக்கியப் படைப்புகளாக என்றும்அழிவின்றி விளங்கும்!

இனி, இத்தகைய உயிரற்ற இலக்கியப் படைபுகளை வளரும் சமுதாயத்து இளைஞர்கள் படிப்பதனால், நன்மை ஒன்றும் ஏற்படாவிடினும், தீமை யாவது உண்டாகாத வண்ணம் நாம் விழிப்புடன் இருத்தல் வேண்டும்! 'அறநெறி இலக்கியங்களால் தீமையா!' எனச் சிலர் கொதிப்படைவார்கள். ஆம் உண்டு! சமுதாயத்தினின்று மனிதனைப் பிரித்து அவனுக்கென்று ஒரு சில கருத்தியலான அறநெறிகளைப் போதித்து; ஆனால் அவற்றை எவ்வாறு அடைவது என்பதற்கு வழிவகைகளைக் காட்டாத வரட்டு இலக்கியப் படைப்புகளால் அடிமைகளாய் நசுக்கப்பட்டு அல்லற்படும் பெருவாரியான சாதாரண மக்கட் சமுதாயத்துக்கு தீமைகள் உண்டு. இந்த இலக்கியங்கள் அவர்களை விழிப்புற்று வீறுகொண்டெழச் செய்வதில்லை. ஒடுக்கும் நிலச்சுவாந்தார்களையும், ஏகபோக முதலாளி வர்க்க கும்பலையும் நிர்மூலமாக்கி வர்க்கமற்ற சுதந்திர சமுதாயத்தை சிருஷ்டிப்பதற்கு இந்த வரட்டு இலக்கியங்கள் உதவுவதில்லை. இதற்கு மாறாக, முதலாளி, நிலச்சுவாந்தார் வர்க்கத்தினரை மறைமுகமாகக் காப்பாற்றுவதற்கெனவே இவை கலை மெருகுடன் தோன்றியவை. கலை அம்சம் எனும் தேன் பூசப்பட்ட நச்சுப் பழங்களாகவே இவற்றைகொள்ளல்வேண்டும்.

''அறஞ் செய விரும்பு,'' ''ஆறுவது சினம்'' சிறந்த அற நெறிகள். ''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்'' சிறந்த போதனை. ஆனால் இவையெல்லாம் யாருக்கு, எச் சந்தர்ப்பங்களில் பயன்படும் என்பதை ஆராய வேண்டும். தனிப்பட்டவாகளுக்கு தத்தம் சூழலில், முரண்பாடற்ற உறவுகளில் இவை பயன்படலாம். ஆனால் முழுச் சமூகத்துக்கும் இவை பயன்படுமா? சமூகத்தின் அடிப்படை முரண்பாடுகளை இவை தீர்க்குமா? அப்படியாயின் புத்தாகளும், யேசுநாதர்களும், காந்தி மகான்களும்தோன்றியும் சமூகம் மாறாதது ஏன்? ஆத்மீக போதனையால்சமூகத்தை மாற்றி அமைக்க முயல்வது தாழ்ந்துவரும் ஓட்டைக் கப்பலைக் காப்பாற்ற ஓட்டையை அடைப்பதற்குப் பதிலாக, உள்ளிட்ட நீரைக் கையால் எற்றிக் கப்பலைக்காப்பாற்ற முயல்வது போலாகாதா? வலது காலைக் கடித்த ஒரு நாய்க்கு இடது காலையும் கொடு என்று சொன்னால் எப்படி இருக்கும்? புலியைக்கட்டி வைத்து புலால் மறுத்தல்பற்றி உபதேசம் செய்தால் என்ன நடக்கும்? மனித உருவில் உள்ள நாய்களும் புலிகளும் மலிந்துள்ள சமூகத்தை மாற்றுவது எங்ஙனம்? ''பொய்யுரைத்துப் பொருள் தேடாதீர்கள், லஞ்சம் வாங்காதீர், கறுப்புச் சந்தையிலே பொருள் தேடாதீர்கள்'' என்ற சாமி சிதம்பரனாரின் போதனை விளக்கங்களை துண்டுப் பிரசுரமாக அடித்துக் கூட்டுறவுச் சங்கக் கடைக் கதவுகளிலும் ஊழல் மலிந்த ஸ்தாபனங்களின் வாயில்களிலும் ஒட்டிவிட்டால், ஊழல்கள் அழிந்துவிடுமா? இத்தகைய ஆத்மீக போதனைகளைக்கொண்ட ஒரு இலக்கியத்தை உயிருள்ள இலக்கியமாகக்கருதமுடியுமா?

இன்றைய சமுதாயத்திற்கு ''அச்சம் தவிர்'', ''ஆண்மை தவறேல்''போன்ற உயிருள்ள வசன கவிதைகளும்.

''துன்பத்தை நீக்க
வழியில்லையோ? ஒரு
மருந்திதற் கிலையோ?-செக்கு
மாடுகள் போலுழைத்து
தேங்குகின்றார்''

என்றச் சமூகச் சித்திரங்களுமே இன்று தேவைப்படும் உயிருள்ளஇலக்கியங்களாகும்.

**சுவாமிநாதன்**

## வாழ்வென்ற சொல்லதனைப் பொதுமை செய்வோம்

புறப்படென ஒருசொல்லுக் கேட்டால்போதும்
பொங்கியெழும் வேங்கையென பாய்ந்துசெல்லும்
மறப்படையின் அங்கம்நாம் அகிலம்எங்கும்
மார்தட்டி மறங்காட்டி விரைவோமென்று
விறல்கூறும் பரம்பரையின் அணியில்நிற்கும்
வீரர்நாம் எரிமலையின் தோழரும்நாம்
புறப்பட்டோம் புறப்பட்டோம் போருக்கென்று
புரட்சியுரு தருங்கவிதை இசைக்கவாரீர்.

பொன்தட்டில் நஞ்சூற்றி அழச்சாரென்று
பொய்யுரைக்கும் வஞ்சகரின் பல்லைத்தட்ட
வன்மையுடன் புறப்படுக எஃகுத்தோழா
வச்சிரம்நீ வானளக்கும் மலையைஎல்லாம்
உண்கையால் பொடிப்பொடியாய் ஆக்கும்சக்தி
அடைந்தவன்நீ ஆழ்கடலின் அழம்பார்க்கும்
வன்மகன்நீ வாள்தூக்கு பகையைவெல்வோம்
வாழ்வென்ற சொல்லதனைப் பொதுமைசெய்வோம்.

—சுபத்திரா

காங்கேசன் சிமேந்து தொழிலாளர் வேலைநிறுத்தம்

# பொறுப்பற்ற நிர்வாகத்தின் போக்கிரித்தனம்

## வேலைநிறுத்தத்தை உடைக்க ரூபா 25,000 செலவு

### கோரிக்கை தர பணமில்லையாம்!

**26-6-64-ல்** இருந்து காங்கேசன் சிமேந்து தொழிற்சாலையில் வேலைசெய்யும், சுமார் 715 தொழிலாளர்கள், வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். கடந்த பல வருடங்களாகக் கஷ்டப்பட்டு உழைக்கும் இத் தொழிலாளர்கள் தங்களுக்கு உரித்தான பல கோரிக்கைகளை தொழிற்சாலை நிர்வாகத்தின் முன் வைத்தார்கள். சுழலும் விசிறிக்குக் கீழ் இருந்துவிட்டு சுளை சுளையாகச் சம்பளமும் அத்துடன் 'கிம்பளமும்' எடுக்கும் நிர்வாகத்தினர், கொதிக்கும் வெயிலிலும், கொட்டும் மழையிலும், பனியிலும், கொல்லும் சிமேந்துத் தூசியின் மத்தியிலும் உழைத்து உருக்குலைந்து போன உழைப்பாளிகளின் உரிமைக்கோரிக்கைகளை உதறித்தள்ளினார்கள்! முடிவு! வெடித்தது வேலைநிறுத்தம்! இன்று 715 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தொழிற்சாலைக்கு வெளியில் நிற்கிறார்கள்.

இந்த நிலைக்குக் காரணகர்த்தாக்கள் யார்? வேலை நிறுத்தத்திற்கு பொறுப்பாளிகள் யார்? இன்று காங்கேசன் சிமேந்து தொழிற்சாலையில் நடக்கும் வேலைநிறுத்தத்திற்கு முழுப் பொறுப்பையும் தொழிற்சாலை நிர்வாகிகளே ஏற்கவேண்டும். அதை விட்டு வேலை நிறுத்தத்திற்கான குற்றத்தை தொழிலாளர்கள் மீது சுமத்துவது சுத்த அபாண்டமாகும். இந்த வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பதற்கு தொழிலாளர்கள் பல சந்தர்ப்பங்களை நிர்வாகத்திற்குக் கொடுத்தார்கள். ஆனால் நிர்வாகத்தினர் அச் சந்தர்ப்பங்களைப் பயன் படுத்த தவறியது மட்டுமல்லாமல் பயன் படுத்த மறுத்தும் விட்டார்கள். தொழிலாளர்களின் பொறுமையைப் பெலஹீனமாக நிர்வாகிகள் கருதியதன் விளைவுதான் இன்றைய வேலைநிறுத்தம்.

வேலைநிறுத்தம் என்பது தொழிலாளியின் கடைசி ஆயுதம்; முதல் ஆயுதமல்ல. அவ்வாயுதத்தை தொழிலாளியைப் பாவிக்கத் தூண்டுவது முதலாளிகளினது அல்லது நிர்வாகிகளினது பிடிவாதமும், வேண்டாத நடவடிக்கைகளுமே. இதைத்தான்இன்று சிமேந்துத்தொழிற்சாலை நிர்வாகம் செய்தது! பலனையும் கண்டது! காங்கேசன் சிமேந்துத் தொழிலாளர்கள் தமது கடைசி ஆயுதமான வேலைநிறுத்த ஆயுதத்தைப் பாவிக்கு முன் நிர்வாகத்திற்கு எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து 21 நாள் அவகாசம் கொடுத்தார்கள். ஏன், இந்த 21 நாள் அவகாசம் தொழிலாளர்களால் நிர்வாகத்தினருக்குக் கொடுக்கப்பட்டது? தமது கோரிக்கைகளைப் பற்றி தமது பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி கலந்தாலோசித்து தமது கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்ளவே. ஆனால் நிர்வாகத்தினர் என்ன செய்தனர்? தொழிலாளர் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்குப் பதிலாக தொழிலாளர் துரோகிகளைச் சந்தித்தார்கள்-தமது கைக் கூலிகளுடன், கருங்காலிகளுடனும் கலந்தாலோசித்தார்கள்! எதைப் பற்றி? தொழிலாளர்களின் கோரிக்கைகளில் எவற்றை, எப்படி, எப்பொழுது கொடுப்பது என்பதைப் பற்றியா? இல்லை? தொழிலாளர்களின் கோரிக்கைகளைக் கொடுக்காமல், தொழிலாளர்களின் ஐக்கியத்தை எப்படிக் குலைப்பது. அவர்கள் நடத்த விருக்கும் போராட்டத்தை எப்படி முறியடிப்பது என்பது பற்றி துரோகிகளோடும், கைக் கூலிகளோடும், கருங்காலிகளோடும் கலந்தாலோசித்தார்கள். பொது மக்களின் ஸ்தாபனத்தின் பொறுப்புள்ள நிர்வாகிகள் செய்யும் வேலையா இது?

இலங்கையிலே அதிக லாபத்துடன் நடத்தப்படும் தொழிற்சாலை சாங்கேசன் சிமேந்து தொழிற்சாலையாகும். ஒவ்வொரு வருடமும் பல லட்சக் கணக்கான ரூபாய்களை லாபமாக பெறுகிறது சிமேந்து தொழிற்சாலை. இந்த லாபம் எப்படிக் கிடைக்கிறது? தொழிலாளர்கள் இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி உழைப்பதனால் விளைவதுதான் இந்த லாபம்! இன்று தொழிலாளர் கேட்பது பிச்சையல்ல! உழைப்புக்கேற்ற ஊதியம்! வேலைக்கேற்ற கூலி! அதாவது அவர்கள் தமது உரிமையைத் தான் கேட்கிறார்கள். அதைக் கொடுக்க மறுக்க நிர்வாகிகளுக்கு என்ன உரிமை இருக்கிறது? ர்வாகிகளே! அதிகார ஆணவத்தில் அட்டகாசம் செய்யாதீர்கள்! தொழிலாளர்களின் கோரீக்கைகள் நியாயமானவை! தொல்லைசெய்யாமல் கொடுங்கள்! காலம் மாறுகிறது! உங்களது கோலமும் மாறட்டும்! !

தொழிலாளர்களின் சாதாரண கோரிக்கைகளை நிராகரிக்கும் நிர்வாகத்தின் கீழ் பொது மக்களின் பணம் எத்தனையோ வழிகளில் வீணாக விரையமாகிறது. விலையுயர்ந்த கேபிள்கள், கேடர்கள், எண்ணைப் பீப்பாக்கள் மண் தின்றும், மழையாலும், வெயிலாலும், காற்றாலும் அழிந்து போகின்றன. இப் பணத்திற்கு நிர்வாகிகள் எப்படிக் கணக்குக் காட்டப் போகிறார்கள்? தொழிற்சாலை வாகனங்களில் நிர்வாகிகள் காட்டுக்கு வேட்டையாடப் போகிறார்களே, இந்தப் பணத்திற்கு யாரை வறுத்துவைத்து காட்டப்போகிறார்கள்? தொழிலாளர்களையா?

தொழிலாளர்களின் இன்றைய கோரிக்கைகள் என்ன? நிர்வாகிகளுக்கு இருப்பதைப் போல் குளிரூட்டிய இளைப்பாறும் அறைகள் கேட்கிறார்களா, அல்லது மின்சார விளக்கேற்றிய விளையாட்டு மைதானம் கேட்கிறார்களா? இல்லையே. அவர்கள் கேட்பதெல்லாம் விலைவாசிகள் வ்ஷம் போல் ஏறும் இந் நாட்களில் சீவிப்பதற்கேற்ற கூலிதான்! நிர்வாகிகளான உங்களுக்கு குளிரூட்டிய ஓய்வு அறைகளுக்கும், மின்சார விளக்கேற்றிய விளையாட்டு மைதானங்களுக்கும் விரையம் செய்யப் பணமிருக்கிறது. ஆனால், தொழிலாளர்களின் சாதாரண கோரிக்கைகளைக் கொடுக்கப் பணமில்லை!

தொழிலாளர்கள் கோரிக்கைகளை முன் வைத்த நாள் முதல் இன்றுவரை, அவர்களது ஐக்கியத்தைக் குலைப்பதற்கும். போராட்டத்தை முறியடிப்பதற்குமாக 25,000 ரூபா நிர்வாகிகள் செலவிட்டிருப்பதாக நாம் அறிகிறோம். இன்னும் எத்தனையோ ஆயிரங்கள் அனாவசியமாகப் போகிறது என்பதையும் அறிவோம். இது தேசத் துரோகம்! பொதுமக்களின் பணத்தை இப்படி விரையமாக்குவதை பொதுமக்களாகிய நாம் பார்த்துப் பொறுத்திருக்க முடியாது! நிர்வாகிகள் இவ் விஷப் பரிட்சையை உடன் நிறுத்த வேண்டும். இல்லையெனில் இதனால் எற்படும் விளைவுகளுக்கு அவர்கள்தான் ஜவாப்தாரிகள்; தேசத் துரோக நடவடிக்கைகளுக்குச் செலவிட்ட பணத்தில் தொழிலாளர்களின் கோரிக்கைகள் சிலவற்றைக் கொடுத்திருக்கலாம். அத்துடன் அவர்களின் நன் மதிப்பையும், ஒத்துழைப்பையும் நிர்வாகம் பெற்று, தொழிற்சாலையை திறம்பட நடத்தி அதிகலாபம் காட்டி, நாட்டிற்கும் நன்மை செய்திருக்கலாம். இதைச் செய்யத் தவறிவிட்ட நிர்வாகத்தின் மேல் பொதுமக்கள் இனிமேல் நம்பிக்கை வைக்க முடியாது.

சிமேந்து தொழிற்சாலையில் வேலைசெய்யும் நிரந்தரத் தொழிலாளர்களை மோசமான நிலையில் நடத்தும் நிர்வாகம் தற்காலிக (கெசுவல்) தொழிலாளர்களை படுமோசமாக—படு பாதகமாக நடத்துகிறது. தற்காலிகத் தொழிலாளர்களை பொறுத்த மட்டில் தவித்த முயல் அடிக்கும் நிர்வாகத்தின் போக்கு மனிதாபிமானமற்றது—காட்டுமிராண்டித்தனமானது. நிரந்தரத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் சர்வ சாதாரணமான உரிமைகளான தொழிற்சங்க உரிமை, லீவு போன்றவை தன்னும் கிடையாது' இத் தொழிலாளர்களை தமது விருப்பு வெறுப்புக்கு வேண்டியவாறு நடத்துகிறது நிர்வாகம். காவல் தொழிலாளர்களும் எங்களைப் போல் மனிதர்களே; அவர்களுக்கும் எங்களைப் போல் வாய் இருக்கிறது—வயிறு இருக்கிறது; வாழத் துடிப்பிருக்கிறது. என்பதை கல் நெஞ்சம் படைத்த நிர்வாகிகள் கொஞ்சமும் உணர்வதில்லை. தற்காலிகத் தொழிலாளர்களை மனிதர்களாக மதிக்காத நிர்வாகிகளின் மிருகத் தனத்தை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இன்று சிமேந்து தொழிற்சாலையில் 600-க்கு மேற்பட்ட கசுவல் தொழிலாளர்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். தினமும் 250-க்கு மேற்பட்ட கசுவல் தொழிலாளர்கள் வேலைசெய்கிறார்கள். இவ்வளவு தொகையான கசுவல் தொழிலாளர்கள் இலங்கையில் வேறு எந்த தொழிற்சாலையிலும் கிடையாது. அது மட்டுமல்ல, ஏனைய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் கசுவல் தொழிலாளர்களுக்கு 6 மாதத்திற்கு வேலை பார்க்க முடியும். ஆனால் இங்கு அதை மூன்று மாதங்களாகக் குறைத்திருக்கிறார்கள். எதற்காக? ஆறு மாதம் ஒரு தொழிலாளி தொடர்ந்து வேலைசெய்தால் அவரை நிரந்தரமாக்கவேண்டும் என்று அரசாங்கச் சட்டம் இருக்கிறது. அதை முறியடிப்பதற்கே, மூன்றுமாதம் மட்டும் இங்கு வேலை கொடுக்கிறார்கள். 248 நிரந்தரத் தொழிலாளர்களுக்கு இடம் காலியாக இருக்கிறது. அவ்விடங்கள் இன்னும் ஏன் கசுவல் தொழிலாளர்களால் நிரப்பப்படவில்லை.

இவ்வளவு தொகையான கசுவல் தொழிலாளர்களை ஏன் இந்த நிர்வாகம் வைத்திருக்கிறது? முதலாவதாக குறைந்த செலவில் இந்தத் தொழிலாளர்களைக் கொண்டு கூடிய வேலை வாங்குவதற்கு. இரண்டாவதாக கசுவல் தொழிலாளர்களை நிரந்தரமாக்கினால், நிரந்தரத் தொழிலாளர்களின் பலம் பெருகிவிடும் என்ற பயத்தால். மூன்றாவதாக தொழிலாளர்களின் போராட்டங்களை கசுவல் தொழிலாளர்களின் துணையுடன் முறியடிப்பது. ஆனால் இன்று பல கசுவல் தொழிலாளர்கள் நிரந்தரத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக அவர்களும் குதித்திருப்பது நிர்வாகிகளின் எண்ணத்தில் மண்ணைத் தூவிவிட்டது.

—எஸ். ஜெயக்கொடி

# இரத்தத்தில் தோய்ந்தாலும் இறுதிவரை போராடுவோம்

### காட்டிக் கொடுப்போர்க்கு செங்கொடிச் சங்க ஊவாப் பிரதிநிதி சாட்டை

"எனதருமைத் தோழர்களே! இதோ இன்று உங்கள் முன்னிலையில் உங்கள் தோட்டக் கொடிக்கம்பத்தில் பறக்கும் இந்த செங்கொடி எங்கள் செவ்விரத்தத்தில் தோய்த்தெடுக்கப்பட்டாலும் சரி, உங்கள் உரிமைகளுக்காக, உங்கள் பிரச்சினைகளுக்காகப் போராட்டம் நிகழ்த்த நாங்கள் எள்ளளவும் தயங்கவோ பின்வாங்கவோ மாட்டோம். எங்களுக்குள்ளிருந்து மோசமான கொள்கையில் வாழ்ந்து வந்த திரிபுவாதக் கும்பலின் குள்ளநரி வேலை இன்று வெட்டவெளிச்சமாகிவிட்டது. புரட்சி சமுதாயத்தை எண்ணி ஒன்றுதிரண்டு முன்னேறிக் கொண்டிருக்கும் எமதருமைத் தோழர்கள் போராட்டமே எமதுரிமைகளைப் பெற சிறந்த மார்க்கம் என்பதைத் தெரிந்துகொண்டார்கள். தொழிலாள வர்க்கத்தை சீரான வழியில் நடத்தக் கூடிய ஒரே இயக்கம், தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடக் கூடிய ஒரே சங்கம் செங்கொடிச் சங்கமே என்பதையும் உணர்ந்து விட்டார்கள்.''

இவ்வாறு நாகதோகை தோட்டத்தில் 28-6-64, ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தற் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய இ. தோ. தொ. சங்க ஊவா பொதுப் பிரதிநிதி தோழர் கரவைக் கந்தசாமி கூறினார். அவர் தொடர்ந்து பேசும்போது பின்வருமாறு கூறினார்:

தொழிலாளர்களின் நம்பிக்கையை ஒரு நாளும் செங்கொடிச் சங்கம் வீண்போகச் செய்யாது. எங்கள் தோழர்கள் ஒவ்வொருவரும், அவர்களது உடலில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரையும் தொழிலாளர்களைக் காட்டிக் கொடுக்கும் எந்த ஒருவருக்கும், எந்த ஒரு சக்திக்கும் இடமளிக்க மாட்டார்கள். மெண்டிஸின் தலையணை மந்திரத்தில் கட்டுண்டிருக்கும் மாரியப்பா போன்றவர்கள் இதைச் செய்யலாம். ஆனால் தொழிலாளர்களுக்காகப் பாடுபட உள் மனதில் சங்கற்பங் கொண்ட எவரும் இத்தகைய பிற்போக்கு சக்திகட்கு அடிபணிய மாட்டார்கள் என்பது மட்டும் திண்ணம்!''

இவரைத் தொடர்ந்து தோழர்கள் கொலின் எஸ். டி. சில்வாவும், அப்துல் கரீமும் சொற்பொழிவாற்றினார்கள். தோட்டத் கமிட்டி அங்கத்துவ தோழர்கள் தர்மன், பெருமாள், செல்லத்துரை ஆகியோரும் சொற்பொழிவாற்றினார்கள். தோழியர்கள் அன்னம்மா, ஆலிஸ் நோனா ஆகியோரும் பேசினர்.

1964-65-ம் வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: வி. இ. தர்மன், உப-தலைவர்: எஸ். தங்கவேலு, செயலாளர்: எ. கே. பெருமாள், உப-செயலாளர்: கே. செல்லத்துரை, தனாதிகாரி: எஸ். துரைசாமி, பிரதிநிதி: ஆர். பாரதி.

கமிட்டி அங்கத்தவர்கள்: எ. இராமன், எஸ். பழனியாண்டி, வெள்ளையன், எம். நயினு, ரெங்கசாமி, ஆர். சிவசாமி, ஆர். கருப்பையா.

பணச் சேகரிப்பாளர்கள்: என். எம். சுப்ரமணியம், உப-சேகரிப்பாளர்: எம். எஸ். ஜெயசீலன்.

அதே தினத்தில் நடந்த லாம்பு தோட்ட உத்தியோகஸ்தர் தெரிவில், பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: வி. பழனியாண்டி, செயலாளர்: அண்ணமலை, தனாதிகாரி: சுப்பிரமணியம்.

கமிட்டி அங்கத்தவர்கள்- முத்துக்கருப்பன், கே. பெருமாள், பொன்னுசாமி, வேலு, கந்தையா கங்காணி; வையாபுரி.

# கொழும்பில் வாலிபர் மாநாடு

## ஆகஸ்ட் 21, 22-ந் தேதிகளில் நடைபெறும்

அண்மையில் நடைபெற்ற, இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனத்தின் கொழும்பு பிரதேசக் கமிட்டி, அதன் மாநாட்டை நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

திரிபுவாதிகளின் சேற்றிலிருந்து எமது சக்திமிக்க அணியை பாதுகாத்துக் கொண்டு, உண்மையான மார்க்சிஸ-லெனினிஸத் தத்துவத்தின் பிசகற்ற, நேர்மையான பாதையாகிய புரட்சிகரப் பாதையினூடே செல்வதற்கு, அத்தகைய சிறப்புமிக்க மார்க்கத்தில் அவர்களை அழைத்துக்கொண்டு, திரிபுவாதிகளைத் தூக்கி எறிந்துவிட்டு, முன்னேற்றப் பாதை நோக்கி முன்னேக்கிச் செல்லும் இச் சரித்திரப் பிரசித்தமான காலத்தில் நாம் நடாத்தப்போகும் இம்மாநாடு, சம்மேளனத்தின் சரித்திரத்திலேயே பிரபல்யமிக்க, முக்கிய இடத்தைப் பெறும்.

வாலிபர் கழகத்தின் பிரச்சினைகளை மறந்து, வாலிபர் ஆதாயத்தை முதலாளி வர்க்கத்தை நடாத்திச் செல்லும் விதமாக, திரட்டிக்கொண்டுச் செல்லும், கீழ்த்தரமான சூழ்ச்சியிலும், வாலிபர் சமூகத்தைக் கெடுத்து அவர்களை நடுவழியில் கைவிட்டுள்ள தேசத் துரோகியான யு. என். பி. உட்பட இந்த நாட்டிலுள்ள பிற்போக்கு வாதிகளுக்கும், தமது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளுவதற்காக மட்டும், சோஷலிஸத்தைப்பற்றி உபதேசம் செய்யும் வர்க்கத் துரோகிகளான திரிபுவாதக் கும்பலுக்கும், இம்மாநாடு, தலைதூக்கி நிமிர்ந்து நிற்க முடியாத அளவு, பெரும் அடி கொடுக்கும் என்பது நிச்சயம்.

இத்தகைய காரணங்களினால் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த இம்மாநாட்டை, சிறப்பித்துவைக்கும் பொறுப்புமிக்கப் பணி மாநாட்டுக் கமிட்டி உறுப்பினர்களாகிய எமக்கும், வாலிபர் சங்க அங்கத்தவர்களாகிய உங்களுக்கும் உள்ள மிக முக்கியமான கடமையாகும் என்பது மட்டுமல்ல பொறுப்புமிக்கப் பணியுமாகும்.

இம்மாவட்ட மாநாட்டைச் சிறப்பிக்கும் முகமாக கொழும்பு பிரதேசத்திற்கு உட்பட சகல வாலிபர் சங்க செயற்குழு உறுப்பினர்களினதும் கூட்டம் ஒன்று கடந்த ஜுன் 21-ந் திகதி காலை, 123-ம் இலக்க இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனக் காரியாலயத்தில் நடைபெற்றது.

(1) மாநாட்டை ஆகஸ்ட் மாதம் 21-ம், 22-ம் திகதிகளில் நடாத்துவது. முதல் தினத்தில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பித்து நடத்துவது.

(2) வாலிபர் வாரம் கொண்டாடுவது.

(அ) நிதி சேகரித்தல், (ஆ) வட்டார ரீதியாக பகிரங்கச் சொற்பொழிவுகள் வைத்து, படக் காட்சிகள் காண்பித்தல் (இ) ''தருணலங்கா'', ''யுவசக்தி'' ஆகிய பத்திரிகைகளை வட்டார ரீதியாக விற்பனைச் செய்தல்.

(3) மாநாட்டின் இறுதி தினத்தன்று மாபெரும் பொதுக் கூட்டம் நடாத்துதலும், குறைந்தளவு 1000-ம் வாலிபர்களைக்கொண்ட ஊர்வலம் நகரை வலம் வருதலும்.

(4) கீழ்க்காணும் காரணங்களைச் செயல்படுத்தும் சங்கங்களுக்குச் சன்மானங்கள் வழங்குதல்.

(அ) தற்பொழுதைக்கு உள்ள அங்கத்தவர்களைவிட குறைந்த பட்சம் பத்து உறுப்பினர்களைப் புதிதாகச் சேர்ப்பித்தல், இவ்விதமாகப் புதிய உறுப்பினர்கள் சேர்த்து முடியும் தினம் ஆகஸ்ட் முதலாம் திகதியாகும்.

(ஆ) கவி, கட்டுரைப் போட்டிகள் நடாத்துதல் (இதற்கான சன்மானத்தைப் பற்றிய விபரங்களுட்பட்ட, இரண்டாவது சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்படும்.)

(5) மாநாடு துவங்கப்பட்ட முதல் தினத்தன்று இரவு வாலிபர் சங்கங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கலாச்சார, கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மேற்காணப்படுபவைகள் தான் எமது வேலைத் திட்டங்கள். இத்துடன், மேலும் சேர்த்துக்கொள்ள வேண்டியவைகளிருந்தால், அது சம்பந்தமாக ஒவ்வொரு வாலிபர் சங்கங்களின் கூட்டங்களைக் கூட்டி, ஆலோசனைகள் நடத்தி, எடுக்கப்படும் தீர்மானங்களை எமக்கு உடனடியாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,
இ. க. ம. மு. வா. ச.
கொழும்பு மாவட்டக்
கமிட்டி.

4-ம் பக்கத் தொடர்

உரையில் தான் சம்மேளனத்துடன் சம்பந்தப்பட விரும்பவில்லை என்று கூறி ஒரு சிலருடன் வெளியேறியது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். மெண்டிஸ் ஏன் இந்தப் பாதையை தேர்ந்தெடுத்தார்? அவர் தனிப்பட்ட முறையில் தனது திரிபுவாத குருமார்களுக்குக் கடமைப்பட்டதினுல், அவர்களின் அடிமையானதால்தான் வேறுவழியின்றி பல வருடம் ஒன்ருக சேர்ந்து வேலைசெய்த தனது தோழர்களைவிட்டு அவர் பிரிந்தார். மெண்டிஸும் அவரது சகாக்களும் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தையும், குறிப்பாக எமது சங்கத்தையும் பிளவுபடுத்த அபாண்டப் பிரச்சாரம் செய்தார்.

இச் சீர்குலைவு வாதிகள் எமக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டு சி. டி. யூ. எப். பிலுள்ளவர்கள் இடதுசாரி ஐக்கிய முன்னணி விரோதிகள் என்றும், இ. ஐ. மு.வை உடைக்க முனைகிறோம் என்பதுமேயாகும். ஆனுல், இவர்களின் இப் பொய்ப் பிரச்சாரம் இன்று அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. நாமல்ல, சமசமாஜத் தலைவர்கள் சிலர் தான் சில மந்திரிப் பதவிகளுக்காக இடதுசாரி ஐக்கிய முன்னணியை உதறித் தள்ளிவிட்டுச் சென்றனர். திரிபுவாதத் தலைவர்கள் இதற்கு என்ன சொல்லுவார்கள்? இந்த அதிர்ச்சியிலிருந்து அவர்கள் விடுபடவில்லை.

இச் சீர்குலைவு வாதிகள், குணசிங்காவின் ஆயுதமான வகுப்புவாதத்தைக்கூடப் பாவித்தனர். இந்த வகுப்புவாதி குணசிங்காவுக்காக நாம் நடத்திய போராட்டம் 1943-ம் ஆண்டில் இருந்த எமது அங்கத்தவர்கட்கு நன்கு தெரியும். இந்த முன்னை நாள் மார்க்சிஸவாதிகள், திரிபுவாதப் போர்வையைப் போர்த்திக்கொண்டு கீழ்த்தரமான பொய்ப் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர்.

## மன்னிக்க முடியாது

தோழர்களே, நான் முன்பு கூறியதுபோல் எமது தொழிலில் எமது சங்கம் மட்டுமே இருந்தது. பலதரப்பட்ட அரசியல் கொள்கையுடையவர்கள் எமது சங்கத்தில் அங்கம் வகித்தனர். எமது சங்கத்தைப் பிளவுபடுத்த திரிபுவாதிகள் எடுத்த முயற்சிகள் மன்னிக்க முடியாதவையாகும். இவர்களின் இந்தப் பாதகச் செயலுக்கு கட்டாயம் தண்டனை அடைவார்கள்.

மெண்டிஸும், அவரது புரட்டல் சகாக்களும் உதட்டளவில் தொழிலாளர் ஐக்கியம் பேசினர். அவர்களது அரசியல் சூன்யத்தின் காரணமாக, அவர்கள் சீர்குலைவு வேலைகளில் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கைகள் முதலாளிகளுக்குச் சாதகமாக அமைந்துள்ளது. முதலாளிகள் விரும்பியது நடைபெற்றது.

தோழர்களே, இனிமேல் தான் எமது அங்கத்தவர்கள் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தொழிலாளி வர்க்கப் போராட்டங்களை முறியடிக்க எண்ணியிருக்கும் முதலாளிகளினதும், அரசாங்கத்தினதும் முயற்சிகளை நாம் முறியடிக்க வேண்டும். இந்த நெருக்கடியான காலக்கட்டத்தில்தான் 21 கோரிக்கைகளை நாம் முன்வைத்துள்ளோம். இவற்றை வென்றெடுக்க திடமானப் போராட்டம் நாம் நடத்த வேண்டியுள்ளது. திரிபுவாத சீர்குலைவு வாதிகளால் ஏமாற்றப்பட்ட எமது அங்கத்தவர்களை மறுபடியும் எமது அணியில் திரட்ட நாம் முயற்சிக்க வேண்டும். கட்சி வேறுபாடுகளை மறந்து எமது அணியை நாம் சக்திபடுத்த வேண்டும். எமது கடமைப் பெரிது. எமது சங்கம் இனிமேல் போராட்டங்களுக்கு எமது வீரமிக்க பங்கை ஏற்க வேண்டும்.

பண்டாரவளை மொடர்ன் தியேட்டர்

# நிர்வாகத்தின் வெறியாட்டம்

## வேலைநீக்க நோட்டீஸ் கொடுத்து பயமுறுத்துகிறது

பண்டாரவளை மொடர்ன் தியேட்டர் ஊழியர்கள் இலங்கை சினிமா, பிலிம்ஸ் ஸ்டுடியோ ஊழியர்கள் சங்கத்தில் சேர்ந்து கோரிக்கைகள் சமர்ப்பித்ததினுல், தியேட்டர் நிர்வாகம் ஊழியர்கள் அனைவருக்கும் ஒரு மாத வேலைநீக்க நோட்டீஸ் அளித்துள்ளது. தியேட்டரை விற்பனை செய்துவிட்டதாக நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறைந்த ஊழியர்களை வைத்து, குறைவான சம்பளத்தில் அதிக வேலை வாங்கிய தியேட்டர் நிர்வாகம், சட்டப்படி பெறவேண்டிய உரிமைகளைக் கேட்டு ஊழியர்கள் சங்கம் சேர்ந்ததும் வயிற்றேரிட்டம் பிடித்துள்ளது.

இதே போன்று பதுளை மொடர்ன் தியேட்டரிலும் ஒரு ஊழியரை அடித்து நோட்டீஸ் கொடுக்காமல்வேலையைவிட்டு விலக்கியுள்ளது நிர்வாகம்.

நிர்வாகத்தின், முறையற்ற அநியாயமான செய்கையை எதிர்த்துப் போராட பதுளை-பண்டாரவளை மொடர்ன் தியேட்டர் ஊழியர்கள் தயாராகவுள்ளார்கள். வேலைநீக்க நோட்டீசைக் கண்டு யாரும் பயந்துவிடப் போவதில்லை. இறுதிவரை எதிர்த்துப் போராடுவது என்று இலங்கை சினிமா ஊழியர்கள் சங்கத்தின் பதுளைக் கிளை முடிவெடுத்துள்ளது.

★

இலங்கை மோட்டார்
தொழிலாளர் சங்க
17-வது

## ஆண்டுவிழா

எதிர்வரும் ஜுலை 11, 12-ந் தேதிகளில், டாட் ரோட்டிலுள்ள செஞ்சிலுவை மண்டபத்தில் நடைபெறும்.

2-ம் பக்கத் தொடர்

பத்தியம் பல பகுதிகளிலிருந்தும் தாக்கப்படுகின்றது. எத்தகைய திருகுதாளத்தில் ஈடுபட்டாலும் அதன் பூரண அழிவைத் தடுக்க முடியாது. ஆகவே போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை, அவர்களின் போராட்டம் புதிய உலக யுத்தத்தை உருவாக்கலாம் என்ற சாக்கில் போராட்டத்தைக் கைவிடும்படி கோருவது லெனின் போதனைகளுக்கு முரணுனது. நாம் இரு உலக யுத்தங்களைக் கண்டுள்ளோம். இவை இரண்டும் ஏகாதிபத்தியவாதிகளால் நடந்தவை. புதிய உலக யுத்தத்தைத் தவிர்ப்பதற்கு ஏகாதிபத்தியத்தை உலகத்திலிருந்து ஒழிப்பதைத்தவிர வேறுவழியில்லை. தனிப்பட்ட போராட்டங்களை தவிர்ப்பதன் மூலம் உலக யுத்தத்தைத் தடுக்க முடியாது. உலகத்தில் பல தனிப்பட்ட யுத்தங்கள் நடைபெற்றுள்ளன. அவை உலக யுத்தத்தில் முடியவில்லை. மூன்று கோடி கோடியான மக்கள் போரிடுகின்றனர். ஏகாதிபத்தியத்திற்கெதிரான இறுதியான கூட்டுத் தாக்குதலுக்காக நாம் ஒன்று திரள்வோம்.

காலனி நாடுகளில் தேசிய இயக்கம் பூர்ஷ்வா ஜனநாயக இயக்கமாகும்; பாட்டாளிவர்க்க சோஷலிஸ இயக்கமல்ல. காலனிகளிலும் அரைச் சுதந்திர நாடுகளிலும் விவசாயிகளே அடிப்படைச் சக்தி என்பதை நாம் உணருதல் வேண்டும். சீனு, வியட்நாம், கொரியா, கியூபா, அல்ஜீரியா, சன்சிபார் ஆகிய நாடுகளிலும் மற்றும் தேசிய சுதந்திரத்திற்காக ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடும் நாடுகளிலும் விவசாயிகளே புரட்சிக் காதரவான அடிப்படைச் சக்தியாகும். ஆகவே இப் புரட்சிகளின் அடிப்படை விவசாயப் புரட்சியாகும்.

உலக சோஷலிஸப் புரட்சியின் கண்ணேட்டத்தில் பார்க்கும் பொழுது அடக்கப்பட்ட நாடுகளின் புரட்சி பாட்டாளி வர்க்கத்தின் நம்பகரமான—நண்பனுன விவசாயியின் பிரச்சினையாகும். ஆனபடியால் தான் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கப் பகுதியில் உள்ள புரட்சிகர நிலைமையில் ஏற்படும் எழுச்சிகளை உலக தொழிலாள வர்க்கம் மிகுந்த சிரத்தையுடன் கவனித்தல் வேண்டும் என்று கூறுவது இயற்கையானதும் லெனினின் கருத்துக்களுக்கு இயைந்ததுமாகும். இந் நாடுகளிடையேயுள்ள பின் தங்கிய நாடு பல விதமான பிரச்சினைகளையும் தரும். ஆனுல் ஐரோப்பாவிலுள்ள மிகவும் பின்தங்கிய நாடான ருஷ்யாவில் புரட்சி எங்ஙனம் வென்றது என்ற உதாரணத்தை லெனின் எங்களுக்கு அளித்துள்ளார்.

சரித்திரத்தின் முன்னேற்றத்தை நிறுத்திவைக்கக் கூடிய சக்தி எதுவுமேயில்லை. 1961-ல் பெல்கிரேட்டில் நடந்த கூட்டுச்சேரா நாடுகள் மாநாட்டில் திரிபுவாதிகளும், நேரு போன்ற வலதுசாரி தேசியவாதிகளும் ஆசிய ஆபிரிக்க மக்களின் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தைத் திசை திருப்பிவிட முயன்றனர். ஆனுல் அம் முயற்சிகள் தோல்வி கண்டன. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் புரட்சிவாதிகளின் அணி உலகப் புரட்சிவாதிகளின் அணியில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஏகாதியத்தியம், காலனிமுறை, புதிய காலனிமுறை ஆகியவற்றை உலகத்திலிருந்து ஒழிக்கும் போராட்டத்தில் அவர்கள் முன்னணியில் நிற்பதை நிச்சயப்படுதுவதே எமதுபொதுப் பணியாகும்.

ஏகாதிபத்தியம், பாட்டாளி வர்க்கப் புரட்சி ஆகியவற்றின் காலகட்டத்தில், மார்க்சிஸம் எனவும் அழைக்கப்படும் லெனினிஸம் பாட்டாளிவர்க்க சோஷலிஸம் புரட்சியை வெல்வதற்கான சக்தி வாய்ந்த ஆயுதமாக மட்டுமல்ல, உண்மையான தேசிய சுதந்திரத்திற்காக அடக்கப்பட்ட மக்களின் புரட்சிகரப் போராட்டங்களின் வெற்றிக்கும் உத்தரவாதமாக அமைகின்றது.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் உக்கிரமடைந்துள்ள உலக நிலைமையில் நாம் லெனின் நினைவுகொண்டாடுகின்றேம். அமெரிக்கா தலைமையிலுள்ள ஏகாதிபத்தியத்திற்கு எங்கும் அடிவிழுகின்றது. குறிப்பாக அடக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்கள் முன்னென்றுமில்லாதவாறு ஆழமாகவும் பரவலாகவும் ஏற்படுகின்றன. இத்தகைய நிலைமையில் போராட்டத்தில் பிழைகளைத் தவிர்க்கவும் உலகப் புரட்சியின் வெற்றியைத் துரிதப் படுத்தவும் லெனினை சரியாகத் தெரிந்துகொள்வதும், அவர் போதனைகளைத் தெரிந்து கொள்வதும் முன்னெப்பொழுதையும்விட எங்களுக்கு முக்கியமானதாகின்றது. —தமிழில்: தம்பி

ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமை
என்னும் தலைப்பில்

## பகிரங்க சொற்பொழிவு

1964, ஜுலை மாதம் 15-ம் திகதி புதன்கிழமை
மாலை 5.30 மணி
ஸ்ரீ நாராயணகுரு மண்டபத்தில்
(லயாட்ஸ் பிரோட்வே) நடைபெறும்

சொற்பொழிவாளர்:

**தோழர் பிரேமலால் குமாரசிறி**

(பொதுச் செயலாளர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி)

இப்படிக்கு:
இலங்கைக் கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு
வாலிபர் சங்க சம்மேளனம்
(கொழும்பு மாவட்டக் கமிட்டி)

பதிப்பித்து வெளியிடுவோர்: ஹஸன் மொஹிதீன்பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது: 'தொழிலாளி' அச்சகம் 9, டிமெல் வீதி, கொழும்பு-2.